உ

சிவமயம்

# சைவநீதி

SAIVANEETHI



மலர் 21 | ஏவிளம்பி ஆவணி, புரட்டாதி | 2017 - Aug, Sep. | இதழ் 5. 6



## திருமுறைப் பெருவிழா சிறப்புமலர்

ரூபா.50/-

இவ்விதழ் வெளிவர அனுசரணை
திரு. கந்தையா ஜெகதீசன் அவர்கள்.
திருமதி. புனிதவதி ஜெகதீசன் அவர்கள்.

# பொருளடக்கம்


1. பன்னிருதிருமுறை - - - - 02
2. திருமுறை முற்றோதல் - - - - 09
3. சம்பந்தரும் மெய்கண்டாரும் - - - 14
4. பூஜையில் திருமுறைக்கு உரியஇடம் - - 17
5. திருமுறைப் பெருமை - - - 19
6. திருமுறைகளில் திருநீறு - - - - 22
7. அகத்தியர் தேவாரத்திரட்டு - - - 24
8. திருமுறைப் பெருவிழா வாழிவாழி - - - 28
9. பன்னிரு திருமுறைகளின் உட்கிடக்கை - - 29
10. அகில இலங்கைத் திருமுறை மன்றம் - - 31
11. இணுவில் இளந்தொண்டர் சபை - - 34
12. அகத்தியர் தேவாரத்திரட்டு உரை விளக்கம் - 37
13. என்வாழ்வில் கண்ட திருமுறையின் மகத்துவம் - 41
14. திருநெறிய தமிழ்சைவானர் விருதுபெறுவோர் - 43
15. திருமுறைப் பெருவிழா அழைப்பிதழ் - - 47
16. நினைவிற் கொள்வதற்குரிய நாட்கள் - - 48


**சைவநீதி** முத்திங்கள் இதழ் பெறுமதி விபரம்

தனிப்பிரதி ரூபா 50.00. ஆண்டொன்றுக்கு ரூபா. 300.00
ஏனைய நாடுகளில் ஆண்டொன்றுக்கு
ஸ்ரேலிங் பவுண் £10 அல்லது
அமெரிக்க டொலர் US $ 15

சைவநீதியின் வளர்ச்சியில் எங்கள் பங்களிப்பு என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமாக.


சந்தா அனுப்ப வேண்டிய முகவரி
C. Navaneethakumar
No: 1/2, 'B' Block, Govt. Flats,
Hospital Road, Dehiwela. Tel : 077 900 8286

உ
சிவமயம்
''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

# சைவநீதி



மலர் ௨ ஏவிளம்பி ஆவணி, புரட்டாதி சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் இதழ் ௫,௬

**தொடக்குனர்:**
கலாபூஷணம்,
ஞானசிரோமணி,
சைவப்புலவர்மணி,
வித்துவான்
**திரு. வ. செல்லையா**

**ஆலோசகர்**
கலாபூஷணம்,
சைவப்புலவர்
**திரு. சு. செல்லத்துரை**

**ஆசிரியர்**
சைவப்புலவர்,
சித்தாந்தச்செம்மணி.
**திரு. செ. நவநீதகுமார் M.A.**

**விநியோகம்**
சித்தாந்தரத்தினம்
**திருமதி. பத்மினி ராஜேந்திரா**

**வெளியிடுவோர்**
திருவாவடுதுறை ஆதீனம்
சைவசித்தாந்தப்
பயிற்சி மையத்தினர்
கொழும்பு.

No. 1/2, 'B' Block,
Govt. Flats,
Hospital Road,
Dehiwela.
Tel: 0779 008 286

உ
சிவமயம்

## சைவத்திருமுறை

"திருமுறையே சைவநெறிக்கருவூலம்". சைவசமயத்தின் முதன்மை நூலாகத் திருமுறை திகழ்கின்றது. திருமுறைகள் இறைவனால் அடியெடுத்துக் கொடுக்கப்பட்டது. பொன்னம்பலவனால் எழுதப்பட்டது. சொக்கநாதனாற் பாடப்பட்டது, மந்திரவடிவாயுள்ளது.

இறைவன் மந்திரவடிவாயுள்ளான். திருமுறையில் உள்ள சொற்கள்யாவும் மந்திர ஆற்றலுடையன.

**"மந்திரங்கள் எழுகோடி ஆதலால் மன்னுமவர்**
**இந்தவகை திருமுறைகள் ஏழாக எடுத்தமைத்து**
**பந்தமுறும் மந்திரங்கள் பதினொன்றும் ஆதலால்**
**அந்தமுறை நான்கினொடு முறைபதினொன்றுஆக்கினார்"**

என்று உமாபதிசிவம் திருமுறைகண்ட புராணத்திலே கூறியுள்ளார்.

கல்லினாலே அமைக்கப்பட்ட கோயில்களிலே இறைவன் எழுந்தருளியிருந்து அருள்புரிகிறான். அதுபோல சொல்லினாலே உருவான திருமுறையில் இறைவன் எழுந்தருளி இருந்து அருள் பாலிக்கிறான். அதனால் திருமுறைகள் மலரிட்டு தூபதீபம் காட்டி வழிபடும் சிறப்புடையன.

திருமுறைகள் பன்னிரண்டு. ஆக்கியோர் இருபத்தேழு அனுபூதிமான்கள்.

திருமுறைகள் அற்புதம் நிறைந்தன. இம்மைக்கும் மறுமைக்கும் இன்பம் பயப்பன. திருமுறை ஓதுபவர் உள்ளத்தையும் கேட்பவர் மனத்தையும் உருக்கவல்லன.

பெருமைமிக்க திருமுறைகளைத் தினமும் பாராயணம் செய்தல் வேண்டும். வைகாசி, ஆடிப் பூரணையிலே விழா எடுக்கவேண்டும். ஆடிப்பூரணையில் எடுக்கப்படும் "திருமுறைப் பெருவிழா சிறப்பிதழாக" ச் சைவநீதி இதழ் வெளிவருகிறது. அனைவரும் படித்துப் பயனுற வேண்டுகிறோம்.

# பன்னிரு திருமுறைகள்

சைவசமயத்தின் இரு கண்கள் எனக் கொள்ளப்படுபவை பன்னிரு திருமுறைகளும் பதினான்கு சித்தாந்த சாத்திர நூல்களும் ஆகும். தெய்வீகத்தன்மை கொண்ட திருமுறைகள் "திருநெறிய தமிழ்" என்றும் "திராவிட வேதம்" என்றும் "அருள் நூல்" என்றும் போற்றப்படுகின்ற திவ்விய நூலாகும். தெய்வத்துக்குச் சூட்டும் பாமாலை எனப் புகழ்ந்துரைக்கப்படும் திருமுறைகள் தில்லை என்னும் திருச்சிற்றம்பலத்தில் கிடைக்கப்பெற்றன. முதலாம் இராச இராச சோழனின் பணிப்புரையின் பிரகாரம் நம்பியாண்டார் நம்பி திருமுறைகளைப் பதினொன்றாக வகுத்தருளினார். முதல் ஏழு திருமுறைகளும் தேவாரப் பதிகங்களாகக் கொள்ளப்படுகின்றன. தேவாரப் பதிகங்களை "அடங்கன் முறை" எனவும் சிறப்பித்தழைப்பர். 1ஆம், 2ஆம், 3ஆம் திருமுறைகளைத் திருஞானசம்பந்தரும் 4ஆம், 5ஆம், 6ஆம் திருமுறைகளைத் திருநாவுக்கரசரும் 7ஆம் திருமுறையைச் சுந்தரமூர்த்தி நாயனாரும் செய்தருளினர். தேவாரத் திருப்பதிகங்களைச் செய்தருளியமையால் இவர்களை "தேவார முதலிகள்" எனவும் சிறப்பித்தழைப்பர். முதல் மூன்று திருமுறைகளிலும் 16,000 திருப்பதிகங்கள் மொத்தமாக இருந்தன. இவற்றில் 384 திருப்பதிகங்கள் மாத்திரம் கிடைக்கப் பெற்றுள்ளன. கிடைக்கப்பெற்றுள்ள திருப்பதிகங்களில் 4158 திருப்பாடல்கள் உண்டு. 4ஆம், 5ஆம், 6ஆம் திருமுறைகளில் மொத்தமாக 4900 திருப்பதிகங்கள் இருந்தன. இவற்றில் 313 திருப்பதிகங்கள் மாத்திரம் கிடைக்கப்பெற்றுள்ளன. இதன்கண் 3066 திருப்பாடல்கள் காணப்படுகின்றன. 7ஆம் திருமுறையில் மொத்தமாக 38000 திருப்பதிகங்கள் இருந்தன. இவற்றில் 100 திருப்பதிகங்கள் மாத்திரம் கிடைக்கப் பெற்றுள்ளன. எமக்குக் கிடைக்கப்பெற்ற பாடல்களின் எண்ணிக்கை 1026 திருப்பாடல்கள் ஆகும்.

தேவாரம் என்பது தெய்வத்தின் மீது அன்புடன் பாடப்படும் இன்னிசைப் பாடல் எனப் பொருள் கொள்ளப்படுகின்றது. வடமொழியில் அமைந்துள்ள கருத்துக்களைத் தூய செந்தமிழில் தேவாரங்கள் எடுத்துரைப்பதால் "தமிழ் வேதம்" என்று சிறப்பித்தழைக்கப்படுகின்றன. முன்னோர்கள் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரால் பாடப் பெற்ற தேவாரப் பதிகங்களைத் "திருக்கடைக்காப்பு" எனவும் திருநாவுக்கரசரால் பாடப்பெற்ற திருப்பதிகங்களைத் "தேவாரம்" என்றும் சுந்தரமூர்த்தி நாயனாரால் பாடப்பெற்ற தேவாரப்பதிகங்களைத் "திருப்பாட்டு" எனவும் அழைத்தனர். திருஞானசம்பந்தரால் பாடியருளப்பட்ட முதலாந் திருமுறையில் இயற்கையழகு, வர்ணனை, மக்களின் வாழ்க்கை முறை, இறைவனது திருக்கோலம், திருக்கோயில்களின் சூழலமைவுகள், புராண இதிகாசக் கதைகள், நிகழ்ச்சிகள், வரலாற்றுக் குறிப்புக்கள், சைவசித்தாந்தக் கருத்துக்கள் என்பன மிக அழகுற எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இரண்டாம் திருமுறையிலுள்ள பாடல்கள் ஞான சம்பந்தரால் செய்தருளப்பட்ட அற்புத நிகழ்வுகளைக் குறித்த பாடல்கள் ஆகும்.

மூன்றாம் திருமுறைப் பாடல்களிலும் சம்பந்தர் செய்தருளிய அற்புத நிகழ்வுப் பாடல்களையும் மந்திரங்கள் எல்லாவற்றுக்கும் மேலான திருவைந்தெழுத்து என்னும் ஸ்ரீ பஞ்சாக்கரத்தைப் போற்றிப் பாடியருளியுள்ள திருப்பதிகங்களையும் உள்ளடக்கியுள்ளன. திருநாவுக்கரசரால் செய்தருளப்பட்ட 4ஆம் திருமுறையிலுள்ள திருப்பதிகங்களில் அவரால் மேற்கொள்ளப்பட்ட அற்புத நிகழ்வுகளைக் குறிப்பனவாக

அமைந்துள்ளன. 5ஆம் திருமுறைப் பாடல்கள் அவரால் மேற்கொள்ளப்பட்ட அற்புத நிகழ்வுகளையும், திருவைந்தெழுத்தின் பெருமைகளையும், பிரணவத்தின் மகிமையையும் எடுத்துரைப்பனவாகவுள்ளன. 6ஆம் திருமுறைப்பாடல்கள் தாண்டகம் என்னும் செய்யுள் வகையைச் சேர்ந்தனவாகும். சுந்தரமூர்த்தி நாயனாரால் பாடப்பெற்ற 7ஆம் திருமுறைப் பாடல்கள் நம்மைத்தோழமையாக உனக்குத் தந்தோம் என்று ஆட்கொண்டருளிய இறைவனை நாயனார் வெகுவாகப் புகழ்ந்தும், போற்றியும், வாழ்த்தியும், வணங்கியும், இரந்தும், ஏசியும் பலவிதமாகப் பாடிய பாங்கில் அமைந்துள்ளன.

8ஆம் திருமுறையை மாணிக்கவாசகர் செய்தருளினார். இதில் திருவாசகம், திருக்கோவையார் என்னும் நூல்கள் அடங்குகின்றன. "திருவாசகத்துக்கு உருகார் ஒருவாசகத்துக்கும் உருகார்" எனச் சிறப்பித்தழைக்கப்படும் தன்மையில் படிப்போர் நெஞ்சை உருகச்செய்யும் தன்மையில் அமைந்தவை திருவாசகப் பாடல்களாகும். பஞ்சபுராண தோத்திரப் பாடல்கள் ஓதும் ஒழுங்கில் இடம்பெறும் திருவாசகம் மாணிக்கவாசகர் சொல்லச் சொல்ல அழகிய பொன்னம்பலவனே பாடல்களைப் பிரதி செய்த சிறப்புக்குரியது. திருவாசகத்தில் இடம்பெறும் சிவபுராணப் பாடல்வரிகள் ஆன்மிக வளர்ச்சியை எடுத்தியம்பும் சிறப்புத்தன்மைகளைக் கொண்டவை. திருவாசகத்தில் எமக்குக் கிடைத்த பாடல்கள் 658 பாடல்களாகும். இறைவனின் பெருமையையும் ஆன்மாவின் சிறுமையையும் ஆன்மாவுக்குத் தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகும் தன்மையையும் இறைவன் ஆன்மாக்களுக்கு எளியவனாகி வந்து ஆட்கொண்டருளும் தன்மைகளையும் சிறப்பாக எடுத்துக்கூறும் நூலாகத் திருவாசகம் விளங்குகின்றது. மாணிக்கவாசகரினால் செய்தருளப்பட்ட திருக்கோவையாரை திருச்சிற்றம்பலக் கோவையார் எனவும் சிறப்பித்தழைப்பர்.

"பாவை பாடிய வாயால் கோவை பாடுக" என்று இறைவன் பணித்தருள மாணிக்கவாசகர் திருக்கோவையாரைப் பாடியருளினார். கோவை என்பது தமிழிலுள்ள தனிச்சிறப்பில் அமைந்த இலக்கிய வகைகளுள் ஒன்று. அது கோர்த்து ஒழுங்கு செய்யப் பெற்றதால் கோவை எனப் பெயர் பெற்றது. இறைவனுக்கும் உயிர்களுக்கும் நிகழும் அன்புக்கு அறிகுறியாகத் தலைவன் இறைவனோடு ஆளுகின்றனர். இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பினை திருக்கோவையார் பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

9ஆம் திருமுறை என்பது ஒன்பது அடியார்களால் பாடப்பெற்றது. திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், பூந்துருத்தி நம்பிகாடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தம நம்பி,சேதிராயர், என்னும் ஒன்பது அடியார்களால் 9ஆம் திருமுறை செய்தருளப்பட்டது. திருவிசைப்பா திருப்பல்லாண்டு என்னும் நூல்கள் இத்திருமுறையினுள் அடங்கப்பெறுகின்றன. சேந்தனார் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு பாட ஏனைய எண்மரும் திருவிசைப்பாவைப் பாடியருளினார்கள். திருவிசைப்பாவில் இருபத்தொன்பது திருப்பதிகங்களும் அவற்றில் எமக்கு கிடைக்கப்பட்ட பாடல்களாக 301 பாடல்களும் அடங்குகின்றன. திருப்பல்லாண்டில் மொத்தமாக ஒரே ஒரு திருப்பதிகம் காணப்படுகின்றது. இதில் பதின்மூன்று பாடல்கள் உண்டு. 10ஆம் திருமுறை திருமூலச்சித்தரால் செய்யப்பட்டது. இதில் திருமந்திரம் என்னும் நூல் அடங்குகின்றது. திருமந்திரம் ஒன்பது தந்திரங்களைக் கொண்டது. இதில் 3000 மந்திரங்கள் உண்டு. வடமொழியில் அமைந்துள்ள ஆகமக் கருத்துக்களைத்

தமிழ் மொழியில் திருமந்திரம் கூறுவதால் "தமிழ் ஆகமம்" என அழைக்கப்படுகின்றது. 11ஆம் திருமுறை நாற்பது பிரபந்தங்களைக் கொண்டது. இப்பிரபந்தங்களில் நமக்குக் கிடைக்கப்பெற்ற பாடல்களின் எண்ணிக்கை 1400. திருவாலவாயுடையார் (இறைவன்) காரைக்காலம்மையார், ஐயடிகள்காடவர்கோன், சேரமான் பெருமான், நக்கீரதேவர், கல்லாட தேவர், கபிலதேவர், பரணதேவர், இளம் பெருமானடிகள், அதிராவடிகள், பட்டினத்தார், நம்பியாண்டார் நம்பி ஆகிய பன்னிரண்டு அடியார்கள் இத் திருமுறையைச் செய்தருளினர். திருவாலவாயுடையார் என்னும் இறைவன் திருமுகப் பாசுரம் என்னும் பிரபந்தத்தினை செய்தருளினார். இதில் ஒரு பாடல் காணப்படுகின்றது. காரைக்காலம்மையார் திருஆலங்காடு மூத்த திருப்பதிகம், திருஇரட்டை மணிமாலை, அற்புதத் திருவந்தாதி என்னும் பிரபந்தங்களைச் செய்தருளினார். ஐயடிகள் காடவர்கோன் சேத்திரத் திருவெண்பாவையும், சேரமான் பெருமான் பொன்வண்ணத்தந்தாதி, திருவாரூர் மும்மணிக்கோவை, திருக்கைலாய ஞானவுலா ஆகிய பிரபந்தங்களையும், நக்கீரதேவர் கைலைபாதி காளத்திபாதியந்தாதி, திருஈங்கோய்மலைஎழுபது, திருவலஞ்சுழி மும்மணிக் கோவை, திருவெழுகூற்றிருக்கை, பெருந்தேவபாணி, கோபப்பிரசாதம், கார்எட்டு, போற்றித் திருக்கலிவெண்பா ஆகிய பிரபந்தங்களையும், திருமுருகாற்றுப்படை என்னும் பிரபந்தத்தையும், திருக்கண்ணப்ப தேவர் திருமறம் என்ற பிரபந்தத்தையும், கல்லாடதேவர் திருக்கண்ணப்ப தேவர் திருமறம் என்னும் பிரபந்தத்தையும், கபிலதேவர் மூத்த நாயனார் திருஇரட்டை மணிமாலை, சிவபெருமான் திருஇரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவந்தாதி என்னும் பிரபந்தங்களையும், பரணதேவர் சிவபெருமான் திருவந்தாதியையும், இளம் பெருமானடிகள் சிவபெருமான் திரு மும்மணிக்கோவையையும், அதிராவடிகள் மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவையையும், பட்டினத்தடிகள் கோயில் நான்மணிமாலை திருக்கழுமல மும்மணிக்கோவை, திருவேகம்ப முடையார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒருபாஒருப.்.து ஆகிய பிரபந்தங்களையும், நம்பியாண்டார் நம்பி திருநாரையூர் திருவிரட்டை மணிமாலை, கோயிற்றிருப்பண்ணியார் விருத்தம், திருத்தொண்டர் திருவந்தாதி, ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி, ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம், ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை, ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை, ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம், ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை, திருநாவுக்கரச தேவர் திருவேகாதச மாலை என்னும் பிரபந்தங்களையும் செய்தருளினர். இவ்விதம் பன்னிரண்டு அடியார்களால் நாற்பது பிரபந்தங்கள் செய்தருளப்பட்டன. நம்பியாண்டார் நம்பியால் பதினொரு திருமுறைகள் வகுக்கப்பட்டன. பிற்காலத்தில் சேக்கிழாரால் பாடப்பெற்ற பெரிய புராணத்தின் பெருமையையும் சிறப்பினையும் உணர்ந்து சைவப்பெரு உலகத்தோர் அவ்வரிய நூலினையும் திருமுறைக்குள் உள்ளடக்கி பன்னிரண்டாந் திருமுறையாகக் கொண்டனர். இவ்விதம் திருமுறைகள் பன்னிரண்டாக அமைவு பெற்றன. பெரியபுராணத்தில் 4286 செய்யுள்கள் உண்டு. பெரிய புராணம் ஒரு சமய இலக்கியமாகும்; அறுபத்திமூன்று நாயன்மார்களினதும், ஒன்பது தொகை அடியார்களினதும் வாழ்க்கைச் சிறப்பை எடுத்துக் கூறும் நூலாகும். அன்பால் நிறைந்த களஞ்சியம் எனப் போற்றப்படும் நூலும் இதுவாகும். சிவபிரான் "உலகெலாம்" என அடியெடுத்துக் கொடுக்க சேக்கிழாரால் பாடப்பெற்ற பெரிய புராணம் பஞ்சதோத்திரப் பாடல்கள் ஒழுங்கில் இடம்பெறும் நூலாகவும் சிறப்புப் பெறுகின்றது.

திருமுறைப் பாடல்கள் கிடைக்கப்பெற்ற திருத்தலம் தில்லை என்னும் திருச்சிற்றம்பலமாகும். இதனால்தான் திருமுறைப் பாடல்கள் ஓத முன்பும் ஓதிய பின்பும் "திருச்சிற்றம்பலம்" எனக் கூறுவர். திருமுறைகளைப் பண்ணோடு ஓதுபவர்களை "ஓதுவார்கள்" அல்லது 'ஓதுவார்மூர்த்தி' என அழைப்பர். பன்னிரு திருமுறைகளிலும் மொத்தமாக 18,497 திருப்பாடல்கள் நமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன. திருக்கோயில்களில் திருமுறைப் பாடல்களை ஓதப் பெறும் பொழுது வரிசை முறையாகப் பன்னிரு திருமுறைகளையும் ஓதமுடியாத விடத்து பஞ்சபுராணப் பாடல்களை ஒழுங்கு முறைப்படி ஓதுவதன் மூலம் திருமுறைப்பாடல்களை ஓதிய சிறப்பினையும் பலனையும் பெற்றிடலாம். தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் ஆகிய ஐந்துமே பஞ்சபுராணங்களாகத் திருமுறைகளில் கொள்ளப்படுகின்றன. பன்னிரு திருமுறைப் பாடல்கள் சைவ உலகுக்குக் கிடைக்கப்பெற்ற பொக்கிஷங்கள். ஞான களஞ்சியமும் அவையே. எனவே அவற்றின் பெருமை உணர்ந்து நாம் அவற்றினை ஓதிப் பயன் பெற்றிடுவோம் என்பதனை மனத்தில் பதித்துச் செயற்படுவோம்.

## திருமுறைகள்

திருஞானசம்பந்தப்பெருமான் அருளிச்செய்த தேவாரம் முதல் சேக்கிழார் திருத்தொண்டர் பெரியபுராணம் வரையுள்ள பாடல்களின் தொகுப்பே திருமுறைகள். திருமுறைகள் பிரணவத்தின் வடிவாய் உள்ளன. ஓங்கார உயிரொலியில் "தோடுடைய" எனத் தொடங்கி மகர ஒற்றில் உலகெலாம் என முடிகிறது. முதல் ஏழு திருமுறைகளும் தேவாரங்கள். இவை அடங்கன்முறை எனப்படும். இவற்றை அருளிச்செய்த திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் தேவார முதலிகள் எனப்படுவர்.

ஆதியிலுள்ள தேவாரத் திருப்பதிகத் தொகை :-

| | |
|---|---|
| திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் | 16000 |
| திருநாவுக்கரசு நாயனார் | 49000 |
| சுந்தரமூர்த்தி நாயனார் | 38000 |
| | 103000 |

இப்போதுள்ள தேவாரத் திருப்பதிகத் தொகை

| | தலப்பதிகம் | பொதுப்பதிகம் | இரண்டின் தொகை |
|---|---|---|---|
| சம்பந்தர் | 377 | 07 | 384 |
| அப்பர் | 276 | 37 | 313 |
| சுந்தரர் | 95 | 05 | 100 |
| | 748 | 49 | 797 |

## திருஞானசம்பந்தர் தேவாரம்

| முதலாந் திருமுறை | | இரண்டாந் திருமுறை | | மூன்றாந் திருமுறை | |
|---|---|---|---|---|---|
| நட்டபாடை | 22 | இந்தளம் | 39 | காந்தாரபஞ்சமம் | 23 |
| தக்கராகம் | 24 | சீகாமரம் | 14 | கொல்லி | 18 |
| பழந்தக்கராகம் | 16 | காந்தாரம் | 29 | கொல்லிக்கௌவாணம் | 01 |
| தக்கேசி | 12 | பியந்தைக்காந்தாரம் | 14 | கௌசிகம் | 13 |
| குறிஞ்சி | 29 | நட்டராகம் | 16 | பஞ்சமம் | 11 |
| வியாழக்குறிஞ்சி | 25 | செவ்வழி | 10 | சாதாரி | 33 |
| மேகராகக்குறிஞ்சி | 07 | | | பழம்பஞ்சுரம் | 18 |
| யாழ்மூரி | 01 | | | புறநீர்மை | 06 |
| | | | | அந்தாளிக்குறிஞ்சி | 02 |
| | 136 | | 122 | | 125 |

இவற்றோடு திருமறைக்காடு பண், கொல்லி, வெள்ளிப்பதிகம் ஒன்றும் சேர்த்து யாழ்மூரியோடு பண் இருபத்திரண்டிற்கும் பதிகம் 384

## திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

| நான்காந் திருமுறை | | ஐந்தாந் திருமுறை | ஆறாந் திருமுறை |
|---|---|---|---|
| கொல்லி | 01 | திருக்குறுந்தொகை | திருத்தாண்டகம் |
| காந்தாரம் | 06 | 100 | 99 |
| பியந்தைக்காந்தாரம் | 01 | | |
| சாதாரி | 01 | | |
| காந்தாரபஞ்சமம் | 02 | | |
| பழந்தக்கராகம் | 02 | | |
| பழம்பஞ்சுரம் | 02 | | |
| இந்தளம் | 03 | | |
| சீகாமரம் | 02 | | |
| குறிஞ்சி | 01 | | |
| திருநேரிசை(கொல்லி) | 02 | | |
| திருநேரிசை | 56 | | |
| திருவிருத்தம்(கொல்லி) | 02 | | |
| திருவிருத்தம் | 33 | | |
| | 114 | | |

ஆறாந்திருமுறை திருத்தாண்டகம் ஆகும். பெரிய திருத்தாண்டகம் புக்கதிருத்தாண்டகம், ஏழைத்திருத்தாண்டகம், அடையாளத் திருத்தாண்டகம், போற்றித்திருத்தாண்டகம், காப்புத்திருத்தாண்டகம், அறநெறித் திருத்தாண்டகம் என ஆறு வகைப்படும்.

## சுந்தரமூர்த்திநாயனார் தேவாரம்

### ஏழாந் திருமுறை

| | | | |
|---|---|---|---|
| 1) இந்தளம் | 12 | 10) காந்தாரபஞ்சமம் | 01 |
| 2) தக்கராகம் | 04 | 11) நட்டபாடை | 05 |
| 3) நட்டராகம் | 14 | 12) புறநீர்மை | 03 |
| 4) கொல்லி | 07 | 13) சீகாமரம் | 04 |
| 5) கொல்லிக்கௌவாணம் | 09 | 14) குறிஞ்சி | 04 |
| 6) பழம்பஞ்சமம் | 07 | 15) கௌசிகம் | 01 |
| 7) தக்கேசி | 17 | 16) செந்துருத்தி | 01 |
| 8) காந்தாரம் | 05 | 17) பஞ்சமம் | 05 |
| 9) பியந்தைக்காந்தாரம் | 01 | மொத்தம் | 100 |

## எட்டாந்திருமுறை

எட்டாந் திருமுறை மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம், திருக்கோவையார் ஆகும்.

திருவாசகத்தில் சிவபுராணம் முதலாக அச்சோப் பத்து வரை 51 பதிகங்களுக்கு 658 பாடல்கள் உள்ளன. திருவாசகப் பாடல் பெற்ற தலங்கள் திருவண்ணாமலை, திருவாரூர், உத்தரகோசமங்கை, கழுக்குன்றம், தோணிபுரம், திருப்பெருந்துறை.

இறைவனைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு பாடப்பட்ட திருக்கோவையில் 400 பாடல்கள் உள்ளன.

## ஒன்பதாந் திருமுறை

ஒன்பதாந் திருமுறை திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஆகும். திருமாளிகைத் தேவர் சேந்தனார், கருவூர்த்தேவர், பூந்துருத்தி நம்பிகாடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் ஆகியோர் திருவிசைப்பாப் பாடியுள்ளனர். கோயில் என்னும் தில்லையம்பலத்திற்கு 16 பதிகங்களும் திருவீழிமிழலை, திருவாவடுதுறை, திருவிடைக்கழி, திருக்களந்தைஆதித்தேச்சரம், திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலம், திருமுகத்தலை திரைலோக்கியசுந்தரம், கங்கை கொண்ட சோளேச்சரம், திருப்பூவணம், திருச்சாட்டியக்குடி, தஞ்சை இராஜராஜேச்சரம், திருவிடை மருதூர், திருவாரூர் ஆகிய 13 தலங்களுக்கும் தலத்திற்கொன்றாகப் 13 பதிகங்களுமாக 29 பதிகங்களுக்குப் பாடல்கள் 301. இவை பஞ்சமம், காந்தாரம், புறநீர்மை, சாளரபாணி, நட்டராகம், இந்தளம் ஆகிய பண்களில் அமைந்துள்ளன.

திருப்பல்லாண்டு கோயில் என்ற தில்லையம்பலத்தின்மீது சேந்தனாரால் பாடப்பட்டது. இதில் 13 பாடல்கள் உள்ளன.

## பத்தாந்திருமுறை

திருமூல நாயனார் பாடிய திருமந்திரம். இதில் மூவாயிரம் மந்திரங்கள் உள்ளன.

## பதினொராந்திருமுறை

பதினொராந் திருமுறை திருவாலவாயுடையார் முதலிய பன்னிருவர் பாடிய 40 பிரபந்தங்கள்

1. **திருவாலவாயுடையார்**
   1. சேரமான்பெருமானாயனாருக்கு அருளிச்செய்த திருமுகப் பாசுரம்.
2. **காரைக்கால் அம்மையார்**
   1. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் இரண்டு
   2. திருவிரட்டைமணிமாலை
   3. அற்புதத் திருவந்தாதி
3. **ஐயடிகள் காடவர்கோனாயனார்**
   1. திருவெண்பா

4. **சேரமான் பெருமாணாயனார்**
   1. பொன்வண்ணத்தந்தாதி 2. திருவாரூர் மும்மணிக்கோவை
   3. திருக்கைலாசஞானவுலா

5. **நக்கீரதேவர்**
   1. கைலைபாதி காளத்திபாதியந்தாதி 2. திருவீங்கோய்மலையெழுபது
   3. திருவலஞ்சுழி மும்மணிக்கோவை 4. திருவெழுகூற்றிருக்கை
   5. பெருந்தேவபாணி 6. கோபப்பிரசாதம்
   7. காரெட்டு 8. போற்றித் திருவகவல்
   9. திருமுருகாற்றுப்படை 10. திருகண்ணப்பதேவர் திருமறம்

6. **கல்லாடனார்**
   1. திருக்கண்ணப்பதேவர் திருமறம்

7. **கபிலதேவ நாயனார்**
   1. மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை
   2. சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை 3. சிவபெருமான் திருவந்தாதி

8. **பரணதேவர்**
   1. சிவபெருமான் திருவந்தாதி

9. **இளம்பெருமானடிகள்**
   1. சிவபெருமான் திருமும்மணிக்கோவை

10. **அதிராவடிகள்**
    1. மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை

11. **பட்டினத்துப்பிள்ளையார்**
    1. கோயினான்மணிமாலை 2. திருக்கழுமல மும்மணிக்கோவை
    3. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை 4. திருவேகம்பமுடையார் திருவந்தாதி
    5. திருவொற்றியூர் ஒருபா ஒருப.்.து

12. **நம்பியாண்டார்நம்பி**
    1 திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை
    2. கோயிற்றிருப்பண்ணியர்விருத்தம்
    3. திருத்தொண்டர் திருவந்தாதி
    4. ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி
    5. ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம்
    6. ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை
    7. ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை
    8. ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம்
    9. ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை
    10. திருநாவுக்கரசு நாயனார் திருவேகாதசமாலை

## பன்னிரண்டாந் திருமுறை

பன்னிரண்டாந் திருமுறை சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணம். இதில் இரண்டு காண்டங்களும், திருமலைச்சருக்கம், தில்லைவாழ் அந்தணர்சருக்கம், இலைமலிந்தசருக்கம். மும்மையால் உலகாண்டசருக்கம், திருநின்றசருக்கம், வம்பறாவரி வண்டுச்சருக்கம், வார்கொண்ட வனமுலையாள் சருக்கம், பொய்யடிமையில்லாத புலவர்சருக்கம், கறைக்கண்டன் சருக்கம், கடல்சூழ்ந்த சருக்கம், பக்தராய்ப் பணிவார் சருக்கம், மன்னியசீர்ச்சருக்கம், வெள்ளானைச் சருக்கம் எனப்பதின்மூன்று சருக்கங்களும் 4286 பாடல்களும் உள்ளன.

உ

சிவமயம்

# திருமுறைமுற்றோதல்

- திருமுறைநெறிச்செல்வர், சித்தாந்தரத்தினம் ந.சிவபாலகணேசன் B.A.(Hons),M.A.

திருமுறை முற்றோதல் என்பது ஆன்மிக வளர்ச்சிப் பாதையில் உயிர்களுக்கான உய்திபெறும் சாதனைகளுள் மிக முக்கியமான தொன்றாகும். இதனாற்போலும் யாழ்ப்பாணச் சைவச்சான்றோர் மரபிலே முற்றோதல் நிகழ்ச்சி மாதாந்தமாக வீடுகளிலும், வருடாந்தமாக கோவில்களிலும் நடைபெற்று வருவதை செவிவழிச் செய்தியாகவும் கண்கூடாகக் காணும் பேறும் எம் போன்றோர்க்கு கிடைத்துள்ளதை இங்கு சுட்டிக்காட்டுதல் சிறப்புடையதாகும். இந்தவகையில் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை சித்திரைச் சதய நட்சத்திரத்தில் வருடாந்த திருமுறை முற்றோதல் தொடங்கி ஆடிச்சோதி நட்சத்திரத்தில் நிறைவு செய்து விழாவும் எடுத்து வருவது இன்றுவரை காணக்கூடியதாக உள்ளது. அதேபோல ஸ்ரீ பொன்னம்பலவாணேசுவரர் தேவஸ்தானம், கொழும்பு தைப்பூச நன்னாளில் தொடங்குவதும், வெள்ளவத்தைப் பிள்ளையார் கோவில் பங்குனிஉத்திரத்தில் தொடங்குவதும் ஒருமண்டல காலத்தில் முற்றும் ஓதி நிறைவு செய்வதும் காணக்கூடிய சம்பவங்களாகும். யாழ்ப்பாணத்து வேறுபல கோயில்களிலும் இவ்விதம் நிகழ்வதை அறியலாம். இதுவரை முற்றோதல் செய்யாதவர்கள் திருமுறை முற்றோதல்களைச் செய்யவேண்டியது சிறப்பாகும்.

திருமுறை ஓதலில் தகுதியுள்ளோர் பற்றிய விடயங்கள்;

1. சைவசமயத்திலே பிறந்து சிவதீட்சை பெற்றவராய் இருத்தல் வேண்டும்.
2. மது, மாமிசம் அற்றவராய், ஆசார, அனுட்டானங்களைப் பேணுபவராக இருத்தல் வேண்டும்.
3. வேட்டி, சால்வை (ஆண்கள்), சேலை(பெண்கள்), அணிந்து, விபூதி உருத்திராக்கம் தரித்தவர்களாக இருத்தல் வேண்டும்.
4. கைத்தொலைபேசி திருமுறைஓதும் இடத்தில் வைத்திராதவராக இருத்தல் வேண்டும்.
5. திருமுறைப் புத்தகத்தை பீடத்தின் மேல் உள்ள பட்டு விரிப்பின் மேலே வைத்திருப்பவராய் இருத்தல் வேண்டும்.
6. பதிகத்திற்குரிய பண் கவனித்து ஓதுபவராக இருத்தல் வேண்டும்.
7. இறை மீது அயரா அன்புடையவராய் இருத்தல் வேண்டும்.
8. பொருள் உணர்ந்து ஓதுபவராக இருத்தல் வேண்டும்.

மாதாந்த முற்றோதல் எனும் போது 12 திருமுறைகளையும் வீடுகளில் பூசை அறையில் வைத்து போற்றி வழிபட்டு வரவேண்டியதும், மாதாந்தம் ஒவ்வொரு திருமுறையாக பின்வரும் ஒழுங்கில் ஓதல் செய்து வருதலும் மரபு முறையைப் பேணுவதாக அமையும்.

| திருமுறை எண் - பெயர் | தமிழ் மாதம் | பதிக எண்ணிக்கை | பாடல் எண்ணிக்கை அண்ணளவாக | அருளிய அருளாளர்கள் |
|---|---|---|---|---|
| 1. தேவாரம் | வைகாசி | 136 | 1469 | திருஞானசம்பந்தப் |
| 2. தேவாரம் | ஆனி | 122 | 1331 | பெருமான் |
| 3. தேவாரம் | ஆடி | 126 | 1358 | |
| 4. தேவாரம் | ஆவணி | 114 | 1070 | |
| 5. தேவாரம் | புரட்டாதி | 100 | 1015 | திருநாவுக்கரசு சுவாமிகள் |
| 6. தேவாரம் | ஐப்பசி | 99 | 981 | |
| 7. தேவாரம் | கார்த்திகை | 100 | 1026 | சுந்தரமூர்த்தி சுவாமிகள் |
| 8. திருவாசகம் | மார்கழி | 51 | 658 | |
| திருக்கோவையார் | மார்கழி | - | 400 | மாணிக்கவாசக சுவாமிகள் |
| 9. திருவிசைப்பா | தை | 28 | 288 | திருமாளிகைத் தேவர் முதலான எண்மர். |
| திருப்பல்லாண்டு | தை | 01 | 13 | சேந்தனார் |
| 10. திருமந்திரம் | மாசி | - | 3047 | திருமூலநாயனார் |
| 11. திருமுகப்பாசுரம் | பங்குனி | 01 | 01 | திருவாலவாயுடையார் |
| பிரபந்தங்கள் | பங்குனி | 40 | 1405 | காரைக்கால் அம்மையார் முதலான பதினொருவர். |
| 12. பெரிய புராணம் | சித்திரை | - | 4286 | சேக்கிழார் |

திருமுறைகள் யாவும் இறை அதிட்டித்திருந்த நிலையிலேயே அருளாளர்களால் ஓதப்பெற்றுள்ளன. மேலும் இறைவன் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு 'பித்தா' என்றும், 'தில்லைவாழ் அந்தணர் தம்' எனவும் ஈரிடங்களில் அடியெடுத்துக் கொடுத்துப் பாடவைத்ததும்; சேக்கிழார் சுவாமிகளுக்கு 'உலகெலாம்' என அடியெடுத்துக் கொடுத்ததும், பாடவைத்ததும் சிறப்புடைய அம்சங்களாக நோக்கத்தக்கவையாகும். இவற்றிற்கும் மேலாக 11ஆம் திருமுறையில் திருமுகப் பாசுரத்தை இறைவனே அருளிய நிலையும் இங்கு தொட்டுக்காட்டுவது இன்றியமையாததாகும். மேலும் "திருக்கைலாய ஞானஉலா" திருக்கைலாசத்தில் அருளப்பெற்றதும், "தானெனை முன்படைத்தான்" என்ற பதிகம் மண்ணிலும் விண்ணிலும் அருளப்பட்ட நிலையையும் காட்டுவதன் மூலம் திருமுறையின் பெருமை, பயன் என்பவற்றை உணரக்கூடியதாகவுள்ளது. இவற்றுடனல்லாது அகச்சான்றுகள் சிலவும் காணப்படுவதும் காட்டப்படவேண்டிய தேயாகும். அவை

| பாடல் தொடர் எண் | பாடல் வரிகள் | திருமுறை எண் | பதிக எண் | பாடல் எண் |
|---|---|---|---|---|
| 820 | "எனதுரை தனதுரையாக" | 01 | 76 | 1 - 10 |
| 7079 | "பண்ணிய நூல் தமிழ் மாலை பாடுவித்து என் சிந்தை மயக்கறுத்த திரு அருளினானை" | 06 | 84 | 04 |
| 7438 | "ஊனேரிவ்வுடலம் புகுந்தாய் என் ஒண்சுடரே" | 07 | 21 | 06 |
| 7507 | "பொய்யா தென்னுயிருட் புகுந்தாய் இன்னம் போந்தறியாய்" | 07 | 28 | 05 |
| 226 | "நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை" | 08 | 10 | 12 |

"எனதுரை" என்பது ஞானசம்பத்தப் பெருமானது உரையாகும்; "தனதுரை" என்பது இறைவனின் உரையாகும். "தமிழ் மாலை பாடுவித்து சிந்தை மயக்கறுத்த" என்று திருநாவுக்கரசு சுவாமிகள் தன்னைக் கொண்டு இறைவன் பாடுவித்ததாகவும், மலமயக்கத்தை அறுத்து திருவருளை அருளினாரெனவும் கூறுவது தான் பெற்ற பேறு திருமுறையால் எது என்பதைக் காட்டி நிற்கிறது எனலாம். "உடலம் புகுந்தாய்", "என்னுயிருட் புகுந்தாய்" என்பதன் மூலம் சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறை தன்னுடன் நிற்கும் நிலையை எடுத்துக் காட்டுகிறார். மாணிக்கவாசகரோ தன்னைக் கொண்டு இறைவன் பாடுவித்த நிலையையும், இறைவனது தலைமை நிலையினையும் காட்டி நிற்கிறார். இந்நிலையில் திருமுறைகள் யாவும் இறைவனால் அருளப்பட்டன என்பதும், அவற்றை முறையாக ஓதி இம்மை, மறுமைப் பயன்களைப் பெறமுடியும் என்பதும் மறக்கமுடியாததும், மறுக்கமுடியாததுமான பெரும் உண்மைகளாகும். இம்மைப் பயன்களைத் தரும் பதிகங்கள் பல உள. அவற்றுள் சில:

1. வறுமை நீங்க - "இடரினும் தளரினும்" 3ஆம் திருமுறை 4ஆம் பதிகம்
2. உணவு, உடை பெற - "தம்மையே புகழ்ந்து" 7ஆம் திருமுறை 34ஆம் பதிகம்
3. வஞ்சகர், பகைவரை வெல்ல
   - "செய்யனே திருஆலவாய்" 3ஆம் திருமுறை 51ஆம் பதிகம்.
4. களவு போன பொருளை மீட்க
   - "கொடுகு வெஞ்சிலை" 7ஆம் திருமுறை 49ஆம் பதிகம்
5. கண் நோய் நீங்கி ஒளிபெற
   - "ஆலந்தானுகந்து" 7ஆம் திருமுறை 61ஆம் பதிகம்.
   - "மீளா அடிமை" 7ஆம் திருமுறை 95ஆம் பதிகம்
6. வெப்பு நோய் நீங்க - "மந்திரமாவது நீறு" 2ஆம் திருமுறை 66ஆம் பதிகம்.
7. குடல், வயிறு சம்பந்த நோய் நீங்க
   - "கூற்றாயினவாறு" 4ஆம் திருமுறை 1ஆம் பதிகம்.
8. சர்ப்பதோஷம் நீங்க - "சடையாயெனுமால்" 2ஆம் திருமுறை 18ஆம் பதிகம்.

9. கிரக பீடைகள் தோஷம் நீங்க
- "வேயுறுதோளிபங்கன்" 2ஆம் திருமுறை 85ஆம் பதிகம்

10.அட்டமத்துச்சனி, ஏழரைச்சனி, கண்டச்சனிகளால் வரும் இடர்கள் நீங்க
- "போகமார்த்த" 1ஆம் திருமுறை 49ஆம் பதிகம்.

மனிதப்பிறவியிலேதான் திருமுறை ஓதல் மூலம் சாதனை செய்து பயன்பெற முடியும் என்பதே யதார்த்தம். இப்பிறவி தப்பினால் உயிர் சாதனை செய்யக்கூடிய நிலை அருமையிலும் அருமையேயாகும். சிவஞான போதத்தில் மெய்கண்டதேவ நாயனார் "இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா" என உயிர் சார்ந்ததன் வண்ணமாய தன்மை கொண்டு நின்று அறிவதாய் உளதாகியதும், உபதேசியாய் நின்ற அறிவு என்பதாலும் சாதனைக்குரியவன் இவனே என்ற நிலையைக் காண்பிப்பதும் உற்றுநோக்கி அடையற்பாலதாகும். சாதனை செய்து பயன்பெறுவது மனிதப் பிறவிக்குக் கிடைத்த கொடையாகும். பயன் பற்றிய அகச்சான்றுகள் பல உள எனினும் சிலவற்றைப் பார்ப்பதே முடியுமானதாகும்.

**தேவாரம்**

1. "திருநெறிய தமிழ் வல்லவர் **தொல்வினை தீர்தல்** எளிதாமே" 1. 1. 11
2. "தமிழ் மாலை
பற்றி என்றும் இசைபாடியமாந்தர் **பரமன் அடி** சேர்ந்து" 1. 2. 11
3. "இவை பத்தும் இசை வல்லார்
கேதத்தினை இல்லார் **சிவகெதி**யைப் பெறுவாரே" 1. 9. 11
4. "பத்தும் பாடப் பறையும் பாவமே" 1. 29. 11
5. "பன்னாள் பாடியாடப் பிரியார் **பரலோக**ந்தானே" 1. 74. 11
6. "இன்னிசையாற் பாடவல்லார் இருநிலத்தில் **ஈசன்** எனும்
இயல்பினோரே" 1.132. 11
7. "பாடுவார் பெறுவார் **பரலோக**மே" 5. 59. 9
8. "உரைப்பார்களுங் கேட்பவரும்
சீருர் தரு தேவர் கணங்களொடும்
இணங்கிச் **சிவலோக**மதெய்துவரே" 7. 9. 11
9. "இன்னிசை பாடுவார் உமைகேள்வன் **சேவடி** சேர்வரே" 7. 36. 11

**திருவாசகம்**

10. "சொல்லியபாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் **சிவனடி**க்கீழ்" 8. 1. 95
11. "வினையேன் அழுதால் **உன்னை**ப் பெறலாமே" 8. 5. 90
12. "பாட வேண்டும் நான் போற்றி"
"ஆடவேண்டும் நான் போற்றி"
"கூடவேண்டும் நான் போற்றி"
"**வீடு தந்து** அருளு போற்றி" 8. 5. 100
13. "அறைகூவி **வீடு அரு**ளும் அங்கருணை வார்
கழலே பாடுதுங்காண் அம்மானாய்" 8. 8. 1

14. "அந்தம் ஒன்றில்லா ஆனந்தம் பெற்றேன்" 8. 22. 10
15. "எனைப் பெரிதும் ஆட்கொண்டு என்
பிறப்பறுத்த இணையிலியை" 8. 31. 2
16. "தன் இணை மலர்கழல் காட்டி அறிவு தந்து
எனை ஆண்டு கொண்டருளிய அற்புதம்" 8. 41. 10
17. "சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தன்" 8. 51. 1

**திருவிசைப்பா**

18. "கருவூர் அமுதுறழ் தீந்தமிழ் மாலை சீலமாப்
பாடும் அடியவர் எல்லாம் சிவபதம் குறுகி நின்றாரே" 9. 11. 10
19. "பூந்துருத்தி காடன் தமிழ்மாலை பத்தும் கருத்தறிந்து
பாடும் இவை வல்லார் பற்றுநிலை பற்றுவரே" 9. 19. 10
20. "கண்டராதித்தன் அருந்தமிழ் மாலைவல்லார்
பேராவுலகிற் பெருமையோடும் பேரின்பம் எய்துவரே" 9. 20. 10
21. "திருவாலி சொல்லிவை மேவவல்லார்கள்
விடையானடி மேவுவரே" 9. 22. 11
22. "வண் புருடோத்தமன் கண்டுரைத்த வாசமலர்கள் கொண்டு
ஏத்தவல்லார் மலைமகள் கணவனை அணைவர்தாமே" 9. 26. 11

**திருமந்திரம்** திருமுறை மந்திரம்

23. "காலை எழுந்து கருத்தறிந்து ஓதிடின்
ஞாலத்தலைவனை நண்ணுவரன்றே" 10 - 99
24. "எம் ஈசன் திறம் கேட்டும் பெற்ற சிவகதி தானே" 10 - 300
25. "ஓதுமின் கேள்மின் உணர்மின் உணர்ந்தபின்
ஓதி உணர்ந்தவர் ஓங்கி நின்றாரே" 10 - 301
26. "பாடும் திருமுறை பார்ப்பதி பாதங்கள் சூடுமின்
சென்னிவாய்த் தோத்திரம் சொல்லுமே" 10 - 1067
27. "வென்றிடலாகும் வினைப் பெரும் பாசத்தை" 10 - 1232
28. "தேடித்திரிந்து சிவபெருமான் என்று பாடுமின்
பாடிப் பணிமின் பணிந்தபின் கூடிய நெஞ்சத்துக்
கோயிலாய்க் கொள்வனே" 10 - 1445
29. "ஆடியும் பாடியும் அழுதும் அரற்றியும்
தேடியுங் கண்டேன் சிவன் பெருந்தன்மையை" 10 - 1816

**பதினொராம் திருமுறை**

30. "காரைக்காற் பேய் செப்பிய செந்தமிழ் பத்தும்
வல்லார் சிவகதி சேர்ந்து இன்பம் எய்துவாரே" 11- 2- 11
31. "காரைக்காற் பேய் தன் பாடல் பத்தும் பாடியாடப்
பாவம் நாசமே" 11- 3- 11

தொடர்ச்சி 36ஆம் பக்கம்...

உ

சிவமயம்

# சம்பந்தரும் மெய்கண்டாரும்

சைவப்புலவர் சு. செல்லத்துரை

இறைவனுடைய படைப்பிலே ஒவ்வோர் உயிரினத்துக்கும் வாழும் காலம் வகுக்கப்பட்டுள்ளது. இவற்றுள் மனிதருக்குத்தான் வாழும் வயது அதிகம். 'மனிதர்க்கு வயது நூறல்லதில்லை' என்பது பழமொழி. மனிதர் ஒழுங்காக வாழ்ந்தால் 100 வயது வரை வாழலாம்.

வயது என்பது உடலுக்குரியதேயாகும். உடலை இயக்கும் உயிருக்கு வயதில்லை. உயிர் அநாதியானது. ஆதலால் உயிரின் வயதைக் கணக்கிட முடியாது. அறிவுக்கு வயது உண்டு. உடல் வளர்வது போல அறிவும் வளர வேண்டும். அறிவு உயிர் எடுக்கும் பிறவிகள் தோறும் வளர்ந்து கொண்டே போகும்.

வாழ்வின் பயன் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறுதல் ஆகும். நாவலர் பெருமான் "இந்தச் சரீரம் எமக்குக் கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாகும்" என அறுதியிட்டுச் சொல்கின்றார். சிவஞானம் பெற்றவரே முத்தி சித்திக்கப் பெறுவர்.

சிவஞானம் பெறுவதற்கும் வயதெல்லை இல்லை. மிகச் சிறுவயதில் சிவஞானம் பெற்ற பலரைப் பார்க்கலாம். மெய்கண்டதேவர் 2 வயதில் ஞானம் பெற்றார். திருஞானசம்பந்தர் 3 வயதில் ஞானம் பெற்றார். குமரகுருபரர் 5 வயதில் ஞானம் பெற்றார். சங்கரர் 7 வயதில் ஞானம் பெற்றார்.

இவர்களில் மிகக் குறைந்த வயதாகிய 2 வயதில் ஞானம் பெற்ற மெய்கண்டாருக்கும் 3 வயதில் ஞானம் பெற்ற சம்பந்தருக்கும் உள்ள தொடர்பைப் பார்ப்பது உவப்பாகும். திருஞானசம்பந்தர் 7ஆம் நூற்றாண்டிலே வாழ்ந்தவர். மெய்கண்டார் அவருக்கு ஏறக்குறைய 600 வருடங்களின் பின் 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். சம்பந்தர் சைவத்திருமுறை இலக்கியமாகிய தேவாரப் பதிகங்களைப் பாடியவர். மெய்கண்டார் திருமுறை இலக்கியத்துக்கு இலக்கணமாயமைந்த மெய்கண்ட சாத்திரமாகிய சிவஞானபோதம் எனும் சைவஇலக்கணத்தைப் பாடியவர். சம்பந்தர் தேவாரம் பாடிச் சைவத்திருமுறைகளைத் தொடக்கி வைத்தார். மெய்கண்டார் சிவஞானபோதம் பாடி மெய்கண்ட சாத்திரங்களைத் தொடக்கி வைத்தார்.

இவர்கள் இருவரும் இட்ட ஞான வித்து முளைத்து வளர்ந்து பரந்து பன்னிரு சைத்திருமுறைகளாகவும் 14 மெய்கண்ட சாத்திரங்களாகவும், சைவசமயத்தவரின் இரு கண்களாகத் தோத்திரமும் சாத்திரமுமாக விளங்குகின்றன. சிறப்பாகத் தமிழர்களாகிய எமக்குத் தமிழில் எழுந்த முதனூல்களாக விளங்குகின்றன.

சம்பந்தர் காலத்துக்கு முன்பு பல புறச்சமய தத்துவங்களின் குழப்பநிலையால் தமிழ்நாடு இருண்ட காலகட்டத்தில் இருந்தது. இந்நேரத்தில்தான் அறியாமை இருளகற்றும் ஞானசூரியனாகச் சம்பந்தப் பெருமான் அவதாரம் செய்தார். சைவசமய வரலாற்றில் பக்திநெறிக் காலத்தைத் தொடக்கி வைத்தவர் திருஞானசம்பந்தப் பெருமான். அவர் 3 வயதில் சீர்காழியில் சிவபெருமானிடம் ஞானப்பால் உண்டு ஞானத்தமிழ் பாடத் தொடங்கினார். அந்த ஞானத்தமிழ்தான் பக்திநெறிக் காலத்தைத் தொடக்கி வைத்தது எனலாம்.

சீர்காழியில் 3 வயதில் தன் தந்தையாருடன் கோயிலுக்குப் போன பிள்ளையார் தந்தையார் புண்ணிய தீர்த்தக் குளத்தில் அமிழ்ந்து நீராடும் போது அவரைக் காணவில்லையே என்று முன்னால் இருந்த கோயிற் கோபுரத்தைப் பார்த்து அம்மே அப்பா என அழுகின்றார். இந்த அழுகை தான் ஞானத்தமிழாகத் தேவாரமாக ஊற்றெடுத்தது என்பது தெய்வப்புலவர் சேக்கிழார் சுவாமிகள் வாக்கு.

அவர் ஏன் அழுதார் எனும் வினாவைத் தொடுத்து வேதநெறிதழைத் தோங்க மிகுசைவத்துறை விளங்கப் பூதபரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்து அழுதார் என்கிறார். அவர் அழுகையால் வேதநெறி இப்புவியில் தழைத்தது, சைவத்துறையாகிய ஆகம நெறியாம் சைவநெறி தழைத்தது. இம்மண்ணில் பஞ்சபூத பரம்பரையாகிய எல்லா உயிரினமும் தழைத்தன.

அவர் அழுததால் ஞானப்பால் உண்டார், ஞானப்பால் உண்டதால் அவருக்கு சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் கிடைத்தது. உவமையிலாக் கலைஞானம் கிடைத்தது. உணர்வரிய மெய்ஞானம் கிடைத்தது. அதன் பேறாக ஞானத்தமிழாகிய தேவாரம் எமக்குக் கிடைத்தது. சமண, பௌத்த பொய்நெறி இருளில் இருண்டு கிடந்த தமிழ்நாடு சிவஞான ஒளி பெற்றுப் பக்தி நெறி தழைத்தது.

சம்பந்தரைத் தொடர்ந்து அவர் காலத்தில் வாழ்ந்தவராகிய திருநாவுக்கரசரும், அவரின் சற்றுப் பின் காலமாகிய எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளும் அதன்பின் மாணிக்கவாசகரும் சம்பந்தரைப் போலவே சிவாலய யாத்திரை செய்து பாடி சம்பந்தர் தொடக்கி வைத்த பக்திநெறியைப் பெருவெள்ளமாகப் பாய்ந்தோட வைத்தார்கள்.

சைவத்திருமுறைகள் வளர்ச்சி பெற்றிருந்த போதும் அவை மக்கள் கைக்குக் கிடைக்காமையாலும், அவற்றின் உட்பொருளாய சைவசித்தாந்த தத்துவ நெறியை மக்கள் சரியாக விளங்கிக் கொள்ளாமையாலும் சைவம் தளர்ச்சியுற்றது. வேதவழியில் வந்த அத்வைதம், துவைதம், விசிட்டாத்வைதம் முதலான ஒன்றுக்கொன்று மாறுபட்ட சமய தத்துவக் கருத்துக்களால் மக்கள் மயக்கமுற்றனர். இந்த மயக்கம் தீர்க்க மெய்கண்டார் அவதாரம் செய்தார்.

கி.பி. 13ஆம் நூற்றாண்டில் திருப்பெண்ணாகடம் என்ற ஊரில் அச்சுதகளப்பாளர் என்னும் வேளாளர் ஒருவர் சைவ நன்நெறி நின்று வாழ்ந்து வந்தார். அவருக்குப் பிள்ளைச் செல்வம் இல்லாமையால் மனம் வருந்தினார். அச்சுதகளப்பளாரும் மனைவியும் தம் குல குருவாகிய சகலாகம பண்டிதர் என்பாரிடம் சென்று விண்ணப்பம் செய்தனர். அவர் திருமுறைக்குப் பூசை செய்து கயிறு சாத்திப் பார்த்தால் வழிபிறக்கும் என்று சொல்ல அப்படியே செய்தனர். கயிறு விழுந்த ஏட்டை எடுத்து விரித்துப் பார்த்த போது ஞானசம்பந்தப் பெருமானுடைய தேவாரமாகிய

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோடுள்ள நினை
வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண்டாவொன்றும்
வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டுமுக்குளநீர்
தோய் வினையார் அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே.

எனும் திருவெண்காட்டுப் பதிகத் தேவாரம் கிடைத்தது. அதில் திருவெண்காட்டுமுக்குள நீர் தோய் வினையால் தம்மை தீவினை தோயாவாம், பேயடையாது பிரிவெய்தும், பிள்ளையினோடு உள்ளம் நினைவாயினவே வரம் பெறுவர். ஐயுற வேண்டா என்று இருந்தது.

ஞானசம்பந்தப் பெருமானின் ஞான வாக்கின் படி அச்சுதகளப்பாளரும் மனைவியும் திருவெண்காட்டிலுள்ள சூரிய, சந்திர, அக்கினி குண்டம் எனும் மூன்று தீர்த்தங்களிலும் நீராடி நோன்பிருந்தனர். பத்தாம் மாதம் பெருமான் கிருபையால் ஆண் குழந்தை ஒன்று கிடைத்தது. குழந்தை திருவெண்காட்டிலுள்ள சுவேதவனப் பெருமான் கிருபையால் கிடைத்தமையால் அப்பெயரையே குழந்தைக்கு இட்டு வளர்த்தனர்.

குழந்தை மாமனாரின் ஊராகிய திருவெண்ணெய் நல்லூரில் இருந்து வளர்ந்து வந்தது. 2 வயதான போது கயிலாயத்திலிருந்து வான் வழியே போய்க் கொண்டிருந்த பரஞ்சோதி முனிவர் குழந்தையின் ஞானப் பக்குவத்தைக் கண்டு கீழிறங்கி வந்து தீட்சை கொடுத்து மெய்கண்டார் எனும் தீட்சாநாமமும் இட்டுச் சென்றார்.

குழந்தைக்குச் சைவசித்தாந்த ஞானம் பெருக்கெடுத்துப் பாய்ந்தது. கேள்விப்பட்ட பல பெரியோர் அவரிடம் வந்து சித்தாந்த உபதேசம் பெற்றனர். குழந்தை அவர்களுக்குச் சிவஞானபோதத்தை உபதேசித்தது.

இந்த அதிசயத்தைக் கேள்விப்பட்ட தந்தையின் குலகுருவும் இவரின் பிறப்புக்கு வழிகாட்டியவருமான சகலாகம பண்டிதர் அவ்விடம் வந்தார். அவ்வேளை குழந்தை மெய்கண்டார் ஆணவம் பற்றி உபசேித்துக் கொண்டிருந்தார். மெய்கண்டாரைப் பார்த்து ஆணவமாவது யாது எனக் கேட்டார். மெய்கண்டார் அவரையே சுட்டிக் காட்டி நீர் நிற்கும் கோலமே அது என உணர்த்தினார். உண்மையுணர்ந்த சகலாகம பண்டிதர் மெய்கண்டாரின் காலில் வீழ்ந்து நீரே என் குருவாவீர் எனப் பணிந்தார். மெய்கண்டார் அவருக்குத் தீட்சை கொடுத்து அருணந்திசிவம் எனும் தீட்சா நாமமும் கொடுத்துத் தனது முதல் மாணாக்கராக ஏற்றுக் கொண்டார்.

மெய்கண்டார் 12 சூத்திரங்களும் அதற்கு விளக்கமாக 81 எடுத்துக்காட்டு வெண்பாக்களும் பாடிச் சிவஞானபோதத்தைச் செய்தார். அவரது மாணாக்கர்கள் வழிநூல் சார்பு நூல்களாக மெய்கண்ட சாத்திர நூல்களைச் செய்தனர். மெய்கண்ட சந்தானம் தழைத்தது.

ஞானசம்பந்தப் பெருமானுடைய தேவாரத் திருமுறை வாக்கால் உதித்தவர் மெய்கண்டார். திருமுறையின் சாரமாகிய சித்தாந்த தத்துவத்தை அவர் தந்தார்.

இங்கு 3 வயதில் சிவஞானம் பெற்றுச் சைவதிருமுறையைத் தொடக்கி வைத்தவர் சம்பந்தர். 2 வயதில் சிவஞானம் பெற்று திருமுறைச் சாரமாகிய மெய்கண்ட சாத்திரத்தைத் தொடக்கி வைத்தவர் மெய்கண்டார். மெய்கண்டாரைத் திருமுறை தந்த செல்வர் எனவும் மெய்கண்ட சாத்திரத்தைத் திருமுறை தந்த செல்வம் எனவும் சைவர்களாகிய நாம் போற்றுதல் வேண்டும்.

சைவத்திருமுறையும் மெய்கண்ட சாத்திரமும் எமக்கு இரு கண்கள் போன்றவை. அவற்றைத் தந்த சம்பந்தரும் மெய்கண்டாரும் எமது கண்களின் மணி போன்றவர்கள்.

சம்பந்தரையும் மெய்கண்டாரையும் மனதில் இருத்தித் திருமுறைகளையும், மெய்கண்ட சாத்திரங்களையும் ஓதியுணர்ந்து உய்திபெற முயல்வோம்.

உ
சிவமயம்

# பூஜையில் திருமுறைக்கு உரிய இடம் வழங்குக
# சைவாலய பூஜையில் தமிழ் வேதம்

- இலக்கியகலாநிதி, பண்டிதமணி மு. கந்தையா B. A. (Hons)

சைவாலய பூஜையின் பொது அம்சங்கள் அபிஷேகம், அலங்காரம், நைவேத்தியம், தீபாராதனை, அர்ச்சனை, தோத்திரம், தௌர்யத்ரிகம்(நிருத்த கீத வாத்தியங்கள்) என்பன பூஜையின் முழுமையைப் பேணுவதில் இந்த ஏழு அம்சங்களுக்கும் ஒரேமாதிரியான முக்கியத்துவம் உண்டு. இவற்றில் தோத்திரம் என்ற அம்சத்தில் பதி வாக்கு என்ற மகிமைக்குரிய தோத்திரங்கள் யாவும் இடம்பெறவேண்டியவை. இவ்வகையில் வேதம், ஆகமம், சைவத் திருமுறைகள் என்ற மூன்றும் பிரதானமானவை. தன் சிவபாவனை அழுத்தத்தினாலே தான் சிவனாகவே நின்று கொண்டு சிவனருளை வேண்டி வேண்டிப் பூஜை அம்சங்கள் ஒவ்வொன்றனையும் நிறைவேற்ற பூசகர், எவ்வாறு வேதம் அவதாரய என்று வேண்டிக்கொண்டு வேதத்திலுள்ள துதியையும் ஆகமம் அவதாரய என்று வேண்டிக்கொண்டு ஆகமத்திலுள்ள துதியையும், கூறக் கடமைப்பட்டுள்ளாரோ அவ்வாறே 'தேவாரம் அவதாரய' 'திரு வாசகம் அவதாரய' என்று இவ்வகையில் வேண்டிக்கொண்டு திருமுறைகளையும் ஓதக் கடமைப்பட்டுள்ளார். அவரே சங்கற்பித்துக் கொண்டு பூஜை செய்ய முன்னிற்கின்றமையால் அது அவரே செய்தற்குரியது. சிலவேளை தமக்கு ஓதும் திறமை போதாதென்ற காரணத்தால் பூசகரொருவர் அத்திறமையுள்ள மற்றொருவர் மூலம், அதைச் செய்விக்கவேண்டியிருப்பின் தம் தியான வன்மையால் அவரையும் சிவபாவனையில் நிற்பவராகப் பாவித்து அவருக்கு விபூதி வழங்குதல் மூலம் தமது செயலுரிமையை அவர்க்கேற்றி, அவர் அதை நிறைவேற்றும்வரை தாமும் அச் செயற்பாவனையில் வழுவாது தியானத்தில் ஒடுங்கி நின்று தாமே தம்கையால் இத் தோத்திர பூஜையைச் சுவாமிக்கு ஒப்புக் கொடுத்துத் தீபாராதனை செய்ய வேண்டியவராகின்றார். இது பூஜை இலட்சணத்திற்கு ஒத்த நியதியாகும்.

இந் நியதியானது இன்றைய நமது ஆலய பூஜை வைபவங்களிற் பெரிதும் பின்னமடைந்திருக்கின்றது. பதிவாக்காகிய தோத்திரம் என்றவகையில் எழுதாமறையாகிய வேதத்துக்கும் எழுதுமறையாகிய திருமுறைக்குமிடையிலுள்ள அந்தரங்கத் தொடர்பு ஆசீர்வாதம் என்ற மற்றொன்றினால் பேதிக்கப்பட்டுப் போய் விடுகிறது. பூஜா மந்திரமும், பூஜைத் துதியுமாய், தனித்தனி அமையவல்ல வேதத்திற்கும் திருமுறைக்குமிடையே இவ் விரண்டில் ஒன்றுமாகாத ஆசீர்வாதம் புது வரத்தாகப் புகுந்துகொண்ட புதுமைதான் என்னையோ! ஆசீர்வாதம் என்பது பூஜையில் நேர்ந்துள்ள குறைகள் நிறைவுறவும் குறித்த பூஜைப் பலனால் பொதுவாக உலகுயிர்களும், சிறப்பாகப் பூஜையில் சம்பந்தப்பட்ட எஜமான் முதலியோரும் இக பரப்பேறுகளைப் பெறவும் மஹான்கள் அனுக்கிரகிக்க வேண்டும் என்ற ஒரு விருப்ப வெளியீடாகும். அது பூஜையம்சங்கள் சகலமும் பூர்த்தியானபின் நிகழ்தற்குரியது. பூஜை முடிந்த பிறகு குறைநிறைகளுக்கு அமைதி கேட்பதுதானே பொருத்தம். குறையை வைத்துக்கொண்டு குறை நிறைகளுக்கு அமைதி கேட்பது எப்படி? அவ்வகையிற் பார்த்தால் பூஜையொன்றில் ஆசீர்வாதம் செய்யப்பட்டுவிட்டதெனில் பூஜை முடிந்தாய்விட்டதென்ற நிலையையே தெரிவிப்பதாகும். அதன்மேல் 'தேவாரம் அவதாரய' என்று திருமுறை ஓதுவிக்கப் பெறுமாகில் அப்பூஜையில் தோத்திர பூசையம்சம்

சிறங்கணிக்கப்பட்டு அவ்வகையால் திருமுறை புறக்கணிக்கப்பட்ட தென்பதே அர்த்தமாகும். சிவபெருமானால் சிவமெய்ஞ்ஞானிகளைக் கொண்டு முன்னின்று பாடுவிக்கப்பெற்ற திருமுறைகள், சிவன் வாக்கே தம் வாக்காக வருவதாக அவர்கள் கூறும் அத்தாட்சியோடு கூடிய திருமுறைகள், வேதப்பொருளையே கூறுவனவாக ஆன்றோரால் அறுதியிட்டு வைக்கப்பெற்ற திருமுறைகள், தமிழ் நாட்டிலே தனித்துவக்கலையாகச் சிவக் கலையையும் சைவக்கலையையும் ததும்பவைத்த திருமுறைகள், பல்வேறு தெய்வாதிசயங்களை நிகழ்வித்த திருமுறைகள், மந்திர மகாராசனாகிய பஞ்சாக்ஷரமே ஞானமும் மெய்ந்நெறியும் என்ற மகிமையைப் பாருலகறியப் பரப்பி வைத்த திருமுறைகள், சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுதற்கான எளிமையும் இனிமையும் படைத்த திருமறைகள் சிவாலய பூஜையில் அங்ஙனம் புறக்கணிக்கப்படுதல் சைவத்துக்கு அழகே அல்ல. இதனால் சைவம் ஒரு புறம் அவமதிக்கப்படுகிறதெனில் தவறே அல்ல.

இனி, ஆசீர்வாதத்திற்குப் பின் திருமுறைகள் ஓதவிட்டு, அவ்வேளையில் பூசகர் வேறு பராக்காயிருக்கக் காணும் உபத்திரவமும் வேறு. அந்நிலமையே திருமுறை பூஜையிற் சேர்க்கை பெறாது புறம்போக்காய் விடப்பட்டமையைத் துலாம்பரமாகக் காட்டுவதாகும். திருமுறை பாடப்படும்போது பூஜகர் அர்ச்சனைக் குறை நிறைவேற்றுதல், வேறு வகையில் ஆசுவாசம் பண்ணிக்கொள்ளுதல் கூடப் பெரும்பான்மை. திருமுறைமந்திர ஒலிக்கு எதிரிடையாக அர்ச்சனை மந்திர ஒலியைக் கிளப்புதல், அவர் ஏதோ சொல்கிறார், அதைவிட்டு இதைக் கேளும், என்று சுவாமியின் கவனத்தை திசைதிருப்பும் தந்திரமோ என்றும் ஐயுறுதற்கு இடமாகின்றது. அன்றியும், பூஜை அரங்கில் திருமுறைக்குத் தனித்துவமான இடமில்லை என்பதாக வழிபடுவோரிடத்தில் தவறான ஒரு அபிப்பிராயத்தை ஏற்படுத்தவும் வல்லதாகின்றது. இந்நிலை நீடிக்கவிடப்படுதல் தகுமோ? சிந்திமின்!

ஆகம அனுசரணையிலுள்ள தமிழ் நாட்டுக் கோயில்களில் தோத்திர பூஜையில் வேதமும் திருமுறையும் இடையீடின்றி இடம்பெறுகின்றன. வேலணைக்கு அப்பாலுள்ள வட இலங்கைக் கோயில்களிலும் அங்ஙனமே. திருக்கேதீசுவரம், சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோயில், ஐயனார் கோயில்களிலும் அங்ஙனமே. இருந்தும் குடாநாட்டிலும் இலங்கையில் மறுபகுதிகளிலும் பரவலாக இதற்குப் புறக்கணிப்பு நிகழ்கின்றது. சொல்லியும் கேட்காமல் தவறாகப் பண்ணும் புறக்கணிப்பு நிலை காழ்ப்புற்றிருத்தலும் கண்கூடு.

இந்நிலையில் திருத்தம் நேரும் வாய்ப்பு இரு விதங்களில் கைகூடுதல் கூடும். ஆலய நிர்வாகமும் பூஜை உபயகாரரும் பூசகரிடம் உண்மையை விளக்கிச் சரியான நிலை நடைமுறைக்கு வரச்செய்தல் ஒரு விதம். இது சுமுக வழியான நடவடிக்கையாம். மற்றையது ஆசீர்வாதத்திற்குப் பின் திருமுறை ஓத விடப்படுமிடத்து ஒருவரும் திருமுறை ஓத முன்வராதிருத்தல். இது எதிர்நடவடிக்கையாயினும் ஒருசில நாட்களில் சரியான நிலையை வருவிக்கக்கூடியது. அன்றியும் திருமுறையின் உயர் மகிமையை ஆலய வளாகத்தில் ஸ்தாபிக்கக்கூடியதுமாம்.

எந்த வகையாலேயோ சிவநெறி ஆலய நெறிகளைப் போல பூஜை நெறியையும் சரி நிலையில் ஆக்கி வைப்பது சிவபுண்ணியம். பிழையானது நடக்கப் பார்த்திருப்பதே சிவ அபராதம். சிவஅபராதம் வளர்ச்சிக்கல்ல, சிவபுண்ணிய விருத்திக்கு உரியது கோயில். இது நாவலர் வழி வழி உணர்வில் சைவ மக்கள் அவசியம் கடைப்பிடிக்கவேண்டிய ஒன்றாகும்.

உ
சிவமயம்

# திருமுறைப் பெருமை

- சித்தாந்தரத்தினம் பத்மினி ராஜேந்திரன்

அமிழ்தினும் இனிதென ஆன்றோர் போற்றும் மொழி நம் தமிழ் மொழி. இத்தமிழ்மொழி தெய்வத் திரு மொழியாம். இதனையன்றோ 'தன்னேரில்லாத்தமிழ் எனத் தண்டியலங்கார மேற்கோள் செய்யுள் செப்பும். செந்தமிழ் மொழியில் உள்ள சைவநூல்கள் எல்லாம் மூவகையில் அடங்குவன. அவை சாத்திரம், தோத்திரம், புராணம் என்பனவாகும். சைவசமயத்திலுள்ள பதி, பசு, பாச உண்மைகளை சாத்திர முறையில் நிலைநாட்டிக் கூறும் நூல்கள் மெய்கண்ட சாத்திரங்கள் எனப்படும். இறைவனையும், அடியார்களையும் போற்றித் துதிப்பனவாகிய பாடல்கள் தோத்திரங்கள் ஆகும். இறைவன் அருட்செயல்களையும், அடியார் வரலாறுகளையும், கதை வடிவில் எடுத்துக்கூறும் நூல்கள் புராணங்கள் ஆகும். இம் மூவகையில் திருமுறைகள் தோத்திரங்கள் ஆகும். இவற்றுள் 12ஆம் திருமுறையாகிய பெரியபுராணம் புராணமாகவும், 10ஆம் திருமுறையாகிய திருமந்திரம் சாத்திரமாகவும், தோத்திரமாகவும் விளங்குகின்றன.

எல்லாம் வல்ல எம்பெருமானுக்கு கற்கோயில், பொற்கோயில் எடுப்போம். அங்கே அருள் பாலிக்கும் இறைவனுக்கு பல்வகை மலர்களினால் பூமாலை தொடுத்து, எம்பெருமானின் திருமேனியை அலங்காரம் செய்கின்றோம். பாமாலையால் அவன் பெரும் புகழைப் பாடிப் பரவுகின்றோம். இப் பாமாலையின் பெருமையை நாநிறையப் பாடுகிறார், நாநிலம் போற்றும் தாயுமானப் பெருந்தகை.

**பன்மாலைத்திரள் இருக்கத் தமை உணர்ந்தோர்**
**பாமாலைக் கேநீதான் பக்ஷம் என்று**
**நன்மாலையா எடுத்துச் சொன்னார் நல்லோர்**
**நலம் அறிந்து கல்லாத நானுஞ்சொன்னேன்**
**சொன்மாலை மாலையாக் கண்ணீர் சோரத்**
**தொண்டனேன் எந்நாளும் துதித்து நிற்பேன்**
**என்மாலை அறிந்து இங்கே வாவா என்றே**
**எனக்கலப்பாய் திருக்கருணை எம்பிரானே!**

(தாயுமானவர் பாடல்)

"பூமாலை, பாமாலை என்று சொல்கிறோம் அல்லவா. பூமாலை கண்ணுக்கு அழகிய காட்சியாகத் தெரிகிறது என்றால், பாமாலை காதுக்கு அழகான சொல்லும், சந்தமுமான ரூபத்தில் இருக்கிறது. பூமாலைக்கு வாசனை மாதிரி பாமாலைக்கு அதன் அர்த்தம். பூவில் இருந்து தேன் வருகிறது என்றால் பாவில் இருந்து ரஸானுபாவந்தான். ஒரு பெரிய வித்தியாசம் பூமாலை வாடிப்போவது, பாமாலை உலகம் உள்ளளவும் வாடாது.

திருமுறை என்னும் சொல்லாட்சி மூன்றாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டுக்களில்தான் முதன் முதல் காணப்படுகிறது. அதற்கு முதல் தேவாரமுதலிகள் அருளியவை 'திருப்பதிகம்'என்றே குறிக்கப்பட்டுள்ளன. தேவாரப் பதிகங்கள் பத்துப் பாடல்களைக் கொண்டனவாக இருப்பதனால் 'பதிகங்கள்' எனப்படுகின்றன. 'திருமுறை'

என்ற தொடரில் 'திரு' என்பது தெய்வத்தன்மையைக் குறிப்பது. முறை என்ற சொல்லுக்கு நூல், ஒழுங்கு, வரிசை எனப் பல பொருள்கள் உள்ளன. திருமுறை என்பது தெய்வத்தன்மை பொருந்திய நூல். மாறாத செல்வத்தை மக்கள் எளிதாகப் பெறுதற்கு வழிகாட்டும் நூல். உயிர்களைச் செம்மையான முறையில் இறைவனிடம் சேர்ப்பிக்கும் நூல். இறைவனுக்கும், ஆன்மாக்களுக்கும் உறவை விளக்கும் நூல். மெய்யடியார்கள் உள்ளம் உருகி இறைவனிடம் செய்துகொண்ட முறையீடுகளைக் கொண்ட நூல். சைவசமயத்தின் ஞானக் கருவூலமாகத் திகழ்வன திருமுறைகள். இத் திருமுறைகள் ஆன்மாக்களுக்குப் பிறவிப்பிணி தீர்த்து மோட்சத்தைக் கொடுக்கவல்லன. சிரபுரத்து சம்பந்தப் பெருமான் முதலாக, தெய்வச் சேக்கிழார் ஈறாகவுள்ள அருளாசிரியர்கள் இருபத்தெழுவர் வாயிலாகச் சிவபெருமானே வெளிப்படுத்தியருளிய சிறப்பு மிக்க ஞானப்பனுவல்களே திருமுறைகள்.

'நிறை மொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறை மொழி தானே மந்திரம் என்பர்' என்பது தொல்காப்பியம்.

திருமுறை ஆசிரியர்கள் நிறைமொழி மாந்தர்களே. கண்கண்ட பெருமந்திரமே மூவர் பாடல், இதனால் திருமுறைகள் மந்திரங்களே ஆகும். திருமுறைகளால் பெற முடியாதவை எவையும் இல்லை. திருவருட்செல்வமாகிய இத்திருமுறைகளைத் தன்பாற் கொண்டமையால் நமது தமிழ்மொழி, இருந்தமிழ் "ஞாலம் அளந்த மேன்மைத் தெய்வத்தமிழ்" எனச் சேக்கிழார் பெருமானால் போற்றப் பெற்றுள்ளது. இறைவனைப் பண்ணுடன் பாடிப்பரவுவதற்கேற்ற பக்தி நூலாக உள்ளமையால் 'தோத்திரம்' எனவும் போற்றப்படுகிறது.

"ஏடங்கை நங்கை இறை எங்கள் முக்கண்ணி
வேடம் யுகம் விரும்பு வெண் தாமரை
பாடும் 'திருமுறை' பார்ப்பதி பாதங்கள்
ஆடுமின் சென்னிவாய்த் 'தோத்திரம்' சொல்லுமே"
என்னும் திருமந்திரப் பாடலால் அறியலாம்.

இறைவனால் அருளிச் செய்யப்பட்ட வேதங்கள் 'எழுதாக்கிளவி' எனப்படும். அவற்றின் நுண்பொருளை அருளாளர்கள் மட்டுமே அறியமுடியும். அவற்றின் பொருளை சகலவர்க்கத்து ஆன்மாக்களும் அறியும் பொருட்டு, அருளாளர்களாகிய சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் முதலியவர்களை இப்பூவுலகில் இறைவன் அவதரிக்கச் செய்து, அவர்கள் வாயிலாக 'எழுதுமறை'களாக இறைவன் அருளிச் செய்துள்ளான். சிவபெருமான் திருமுறை ஆசிரியர்களை அதிட்டித்து நின்று, அவற்றை அருளிச் செய்திருப்பதால் திருமுறைகள் 'அருள்வாக்கு' எனப்பெறுகின்றன. இவ்வுண்மையினை 'எனதுரை தனதுரையாக' என்னும் சம்பந்தர் வாக்கு உறுதிப்படுத்துகின்றது.

அருளாளர்கள் அருளிய தோத்திரப் பாமாலைகளைச் சுத்தானந்தபாரதியார்
"அப்பருஞ் சுந்தரரும் ஆளுடைப்பிள்ளையும்
அருள்மணிவாசகரும் பொருள் உணர்ந்து உன்னையே
எப்படிப் பாடினரோ அடியார் அப்படிப்பாட நான்
ஆசை கொண்டேன் சிவனே" எனப் போற்றுகின்றார்.

முதன் முதல் தேவாரம் என்ற பாவனையைக் கொணர்ந்தவர் எல்லப்பநாவலர்.

தே+ஆரம் = இறைவனுக்கு பாமாலை
தே+வாரம் = இறைவனிடத்து அன்பை விளைவிப்பது

"சைவத்தின் மேற்சமயம் வேறில்லையதிற் சார்சிவமாம்
தெய்வத்தின் மேற் தெய்வம் இல்லையெனு நான்மறை செம் பொருள்
வாய்மைவைத்த சீர்திருத் தேவாரமும், திருவாசகமும்
உய்வைத்தரச் செய்த நால்வர் பொற்றாளெம் உயிர்த்துணையே.
(அருணைக்கலம்பகம்)

வேதங்கள் அனைத்தும் பிரணவத்துள் அடங்கும். பன்னிருதிருமுறையின் முதற்பாடல் தோடு எனும் ஓங்காரச் சொல்லுடன் தொடங்கி, இறுதிப்பாடல் "உலகெலாம்" என்னும் மகர மெய்யுடன் (ம்) முடிகிறது. தோடு என்பதில் முதல் எழுத்து 'ஓ' உலகெலாம் என்பதில் உள்ள ஈற்றெழுத்து 'ம்' ஆகும். தொடக்கமும், முடிவுமாகிய இரு எழுத்தும் சேர்ந்து 'ஓம்' எனும் பிரணவமாக ஒலிப்பதைக் காணலாம். இதிலிருந்து திருமுறை சைவசமயிகளின் தமிழ்வேதமாகும். திருமுறையில் உள்ள ஒவ்வொரு சொல்லும் மந்திர ஆற்றல் உள்ளவை. திருமுறைகள் மந்திரங்களே என்பதைத் திருமுறைகண்ட புராணங்கூறும்.

மந்திரங்கள் எழுகோடி ஆதலினால் மன்னுமவர்
இந்தவகை திருமுறைகள் ஏழாக எடுத்தமைத்து
பந்தமுறும் மந்திரங்கள் பதினொன்று ஆதலினால்
அந்தமுறை நான்கினொடு முறை பதினொன்று ஆக்கினார்.

திருமுறைகளைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க ஓதுபவர்கள் எல்லா நலன்களையும் எளிதில் பெறுவர் என்பது ஞானசம்பந்தரின் திருவாக்கு.

திருமுறைப் பாடல்கள் கிடைக்கப்பெற்ற திருத்தலம் தில்லை என்னும் திருச்சிற்றம்பலம் ஆகும். இதனால் தான் திருமுறைப் பாடல்கள் ஓத முன்பும், ஓதிய பின்பும் "திருச்சிற்றம்பலம்" எனக் கூறுவர். பன்னிரு திருமுறைப் பாடல்கள் சைவ உலகிற்குக் கிடைத்த பொக்கிஷங்கள். ஞானக் களஞ்சியமும் அவையே. எனவே அவற்றின் பெருமை உணர்ந்து நாம் அவற்றினை ஓதிப் பயன் பெற்றிடுவோம் என்பதனை மனதில் பதித்துச் செயற்படுவோம்.

மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெலாம்.

உ
சிவமயம்

# திருமுறைகளில் திருநீறு

- சைவப்புலவர், சித்தாந்தரத்தினம் செல்வி. கி. வீரசிங்கம்

திருமுறைகள் யாவும் இறைவன் திருவாக்குகளேயாகும். அதனால் தமிழ்பேசும் வேதம் என்கின்றோம். பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகளையும் அருளிய தவமுதல்வர் சம்பந்தர் பெருமானின் பாடல்களை ஆதாரமாகக் கொண்டு, இக்கட்டுரையில் திருநீற்றின் பெருமை பேசப்படுகின்றது.

சிவசின்னங்களில் முதன்மையானது திருவெண்ணீறு. திருமுறையுணர்ந்த மெய்யடியார்களின் திருவுருவம் திருநீற்றுத் திருவுருவமாகும். **திரு** என்றால் தெய்வத்தன்மை என்ற கருத்துடையது. **நீறு** என்பது வினைகளை நீக்குவது என்று பொருள்படும்.

விபூதி என்று கூறிக்கொண்டாலும், **வி** என்பது மேலான(து) எனவும், **பூதி** என்பது செல்வம் என்றும் கருத்துக் கூறலாம். "வெண்ணீறு அணிகிலாதவரைக் கண்டால் அம்ம, நாம் அஞ்சுமாறே" என மாணிக்கவாசகர் பாடியருளியதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

உடற்பிணி, உளப்பிணி, உயிர்ப்பிணியை அகற்றவல்லது திருநீறாகும். திருஞான சம்பந்தர் தம் தேவாரப் பதிகங்களில் தொட்ட இடமெங்கும் திருநீற்று மகிமையைச் சிறப்பித்துக் கூறுவதைக் காணலாம்.

ஞானசம்பந்தர் தம்முடைய முதற் பாடலிலேயே திருநீற்றின் பெருமையைக் கூறியுள்ளார். முதலாம் திருமுறையில், முதலாம் பதிகத்தில், முதலாம் பாடலிலேயே திருநீற்றின் பெருமை புலப்படுத்தப்படுகிறது.

**"காடுடைய சுடலைப் பொடி பூசியென்**
**உள்ளங்கவர் கள்வன்"** - 1. 1. 1

எனப் பாடி நீறணிந்த இறைவனின் திருக் கோலத்தைப் படம்பிடித்துக் காட்டுகின்றார். விபூதியில் ஒளிரும் இறைவனின் திருவுருவத்தை பாடல் தோறும் நாம் காணக்கூடியதாகவுள்ளது.

**"சடையும் பிறையும் சாம்பற் பூச்சும்**
**கீழ் உடையும் கொண்ட உருவம்"** - 1. 23. 1
**"வெந்த சாம்பல் விரையெனப் பூசியே"** - 3. 54. 1
**"சாந்தம் ஈது என்று எம்பெருமான் அணிந்த நீறு"** - 1. 52. 7
**"சாந்தம் வெண்ணீறெனப் பூசி வெள்ளம்**
**சடை வைத்தவர்"** - 2. 120. 1

அவ்வாறே சிவனடியார்களின் திருநீற்றுக் கோலத்தையும் விதந்து பாடியுள்ளார்.

**"பொடிகள்பூசிப் பலதொண்டர் கூடிப்புலர் காலையே"** - 2. 118. 1

**"சிந்தைசெய்து பாடுமடி யார்பொடிமெய்**
**பூசியெழு தொண்டர் அவர்கள்"** - 3. 71. 9

**"வேதவித்தாய் வெள்ளை நீறு பூசி வினையாயின**
**கோதுவித்தாய் நீறெழக் கொடிமா மதிலாயின**
**ஏதவித்தா யினதீர்க் குமிடம்"** - 2. 117. 2

வணங்கிப் போற்றுவாரின் வினை நீங்குமாறையும் குறிப்பிடுகின்றார்.

**"நீறு கொண்டார் இடர் களையாய் நெடுங்கள மேயவனே"** - 1. 52. 7

**"ஆற்ற லடல்விடை யேறுமால வாயான்றிரு நீற்றைப் போற்றி"** - 2. 66. 11

**"வித்தக நீறணி வார்வினைப் பகைக்கு"** - 3. 22. 10

சிறப்பாகக் கூறினால் பாண்டிய மன்னனின் வெப்பு நோயைத் தீர்க்கப்பாடிய திருநீற்றுப் பதிகமானது திருநீற்றின் மகிமையை, புண்ணியர் பூசும் வெண்ணீற்றின் பெருமையை, அற்புதம் விளைவிக்கும் தன்மையை அப்படியே அப்பட்டமாகப் புலப்படுத்துகின்றது. இதனை வினா அமைப்பில் நோக்கின் விளக்கம் தெளிவாகப் புலப்படும். திருநீற்றுப் பதிகம் அற்புதம் நிகழ்ந்ததை ஆதாரப்படுத்தும் பதிகமாகும்.

| பதிகம் 2 - 66 | | பாடல் இல. | பதிகம் | | பாடல் இல. |
|---|---|---|---|---|---|
| அவலம் அறுப்பது எது? | நீறு | 6 | பயிலப்படுவது எது? | நீறு | 7 |
| ஆசை கெடுப்பது எது? | நீறு | 5 | பரவ இனியது எது? | நீறு | 8 |
| இருமைக்கும் உள்ளது எது? | நீறு | 7 | பாவம் அறுப்பது எது? | நீறு | 8 |
| உண்மையில் உள்ளது எது? | நீறு | 2 | புண்ணியமாவது எது? | நீறு | 5 |
| எண்ணத் தகுவது எது? | நீறு | 8 | புன்மை தவிர்ப்பது எது? | நீறு | 2 |
| எயிலது அட்டது எது? | நீறு | 7 | பூச இனியது எது? | நீறு | 5 |
| ஏத்துந் தகையது எது? | நீறு | 10 | பெருமை கொடுப்பது எது? | நீறு | 4 |
| ஏல உடம்பிடர் தீர்ப்பது எது? | நீறு | 9 | பேச இனியது எது? | நீறு | 5 |
| ஓதத்தகுவது எது? | நீறு | 2 | மந்திரமாவது எது? | நீறு | 1 |
| கருத இனியது எது? | நீறு | 10 | மாணந் தகைவது எது? | நீறு | 4 |
| காண இனியது எது? | நீறு | 4 | முனிவர் அணிவது எது? | நீறு | 3 |
| சமயத்தில் உள்ளது எது? | நீறு | 1 | வருத்தந் தணிப்பது எது? | நீறு | 6 |
| தக்கோர் புகழ்வது எது? | நீறு | 3 | வானவர் மேலது எது? | நீறு | 1 |
| துதிக்கப்படுவது எது? | நீறு | 1 | வெந்துயர் தீர்ப்பது எது? | நீறு | 2 |
| துயிலைத்தடுப்பது எது? | நீறு | 7 | வேதத்தில் உள்ளது எது? | நீறு | 2 |
| தேசம் புகழ்வது எது? | நீறு | 5 | | | |

இவ்வாறு உலகில் சகல வகையான சிறப்புக்களையும் தருவது திருநீறு என்பதை உணர்ந்து சைவர்கள் எல்லோரும் அதனைப் போற்றித் துதித்து அணியும் தகுதியுடையவராய் வாழ வேண்டும்.

உ

சிவமயம்

# அகத்தியர் தேவாரத் திரட்டு

- சைவப்புலவர் சு. செல்லத்துரை

மூவர் முதலிகள் எனப்போற்றப்படும் சம்பந்தரும் அப்பரும் சுந்தரரும் பாடிய தேவாரப் பதிகங்கள் ஓரிலட்சத்துக்கு மேலானவை. அவற்றுள் காலவெள்ளத்தில் கரைந்தவை போக இன்று சம்பந்தர் பதிகங்கள் 384ம், திருநாவுக்கரசர் பதிகங்கள் 312ம், சுந்தரர் பதிகங்கள்100ம், ஆக 796 பதிகங்கள் மட்டுமே எமக்குக் கிடைக்கின்றன.

மூவரும் பாடிய இத்தேவாரப் பதிகங்கள் 796ம் அடங்கன் முறை எனப் பிற்காலத்தில் வகுக்கப்பட்டன. கல்வி அறிவு ஒழுக்கங்களில் மேம்பட்டவரான சிவாலய முனிவர் என்பார் தினமும் அடங்கன் முறையை ஓதினால் முக்தி சித்திக்கும் என நினைத்து முயன்றார். அவற்றின் எண்ணிக்கை அதிகமாதலால் ஒரே நாளில் பாடி முடிக்க முடியாமையால் வருந்தினார்.

இதற்கொரு வழிகாட்ட வேண்டும் என்று தேவாரத்தின் உண்மைப் பொருளாய சிதம்பர சபாநாயகரைத் தரிசித்துத் பலகாலம் தவமிருந்தார். உன் எண்ணம் நிறைவேற அகத்தியரிடம் பொதிய மலைக்குப்போ எனச் சபாநாயகரின் அசரீரி கிடைத்தது. அதன்படி பொதிய மலைக்குப் போனார். அகத்திய முனிவரை நோக்கி 3 வருடம் தவம் இருந்தார்.

அகத்திய முனிவர் வெளிப்பட்டு அடங்கன் முறை முழுவதையும் சிவாலயமுனிவர்க்கு உபதேசித்து அவற்றில் இருந்து ஒரேநாளில் ஓதக்கூடிய வகையிலான 25 தேவாரப்பதிகங்களைத் திரட்டிக் கொடுத்து இதனைத் தினமும் உள்ளம் உருகிச் சிவனை நினைந்து ஓதி வழிபடுவாயானால் தேவாரப் பயனாகிய முத்தி சித்திக்கும் என அருளிச் செய்தார். குருவாக்கின்படி சிவாலயமுனிவர் அகத்தியர் தேவாரத்திரட்டை தினமும் ஓதி வணங்கி முக்தி பெற்றார்.

அக்காலம் முதல் தமிழ் வேதமாகிய அகத்தியர் தேவாரத்திரட்டினைச் சிவனடியார்கள் ஓதும் வழக்கம் தொடங்கி இன்றுவரை நின்று நிலவுகின்றது. இந்தச் செய்தியை அகத்தியர் தேவாரத்திரட்டின் பாயிரத்தில் உள்ள வெண்பா கொண்டு அறியலாம்.

**குருவருளும் வெண்ணீறும் எழுத்தைந்தும் கோயில்**
**அரனுருவும் என்றவை மேலாக்கும் - திருவடியும்**
**சிட்டான அர்ச்சனையும் தொண்டு சிவாலயர்க்கென்று**
**இட்டார் அகத்தியனார் எட்டு**

என்பது அப்பாடல். இங்கு குருவருள், திருவெண்ணீறு, அஞ்செழுத்து, கோயில் திறம், சிவனுருவம், திருவடிகள், அர்ச்சனை, அடிமைத்திறம் ஆகிய முத்தி தரும் எட்டு திறன்கள் சொல்லப்படுகின்றன.

மூவர் முதலிகள் ஆகிய ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தர மூர்த்தி சுவாமிகள் மூவரும் இந்த எட்டு நெறிமுறைகளில் நின்று பாடிய பதிகங்களைத் தொகுத்து அகத்திய மாமுனிவர் வகுத்துத் திரட்டித் தந்தமை சிவனருளே ஆகும்.

திருப்பதிகக் கருத்துரை எனும் பாயிரத்தில் இந்த எட்டு நெறிமுறைகளும் விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

1. **குருவருள்** எனும் பகுதியில்

தோடு கூற்றுப் பித்தா மூன்றும்
பீடுடைத் தேசிகன் பேரருளாகும்

என்பதற்கிணங்கத் திருஞானசம்பந்தப் பெருமான் ஞானப் பால் உண்டு பிரமபுரப்பதியில் நட்டபாடைப் பண்ணில் பாடிய "தோடுடையசெவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடி" எனும் பதிகமும்

திருநாவுக்கரசு நாயனார் திருவதிகை வீரட்டானப் பதியில் சூலைநோய் நீக்கம் பெறக் கொல்லிப் பண்ணில் அமைந்த "கூற்றாயினவாறு விலக்ககலீர்" எனும் பதிகமும்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவெண்ணெய் நல்லூரில் சிவபெருமானால் தடுத்தாட் கொள்ளப்பட்ட போது இந்தளப் பண்ணில் பாடிய "பித்தா பிறை சூடி பெருமானே" எனும் பதிகமுமாகிய மூவர் முதலிகள் பாடிய முதற்பதிகங்கள் மூன்றும் இடம்பெறும் அருமைப்பாடு போற்றத்தக்கது.

2. **வெண்ணீறு எனும் பரையின் வரலாறு**

அதாவது திருவருட்சக்தியின்றிறம். இதனை நீற்றுப்பதிகம் நிகழ்த்தும் காலை மாற்றப் பரையின் வரலாறாகும் என்கிறார். இப்பகுதியில் சம்பந்தப் பெருமான் திருவாலவாயில் பாண்டியனின் வெப்பு நோய் நீக்கிப் பாடிய காந்தாரப் பண்ணில் அமைந்த "மந்திரமாவது நீறு" எனும் பதிகம் இடம் பெற்றுள்ளது.

3. **எழுத்தஞ்சும் எனும் அஞ்செழுத்துண்மை** என்பதில்

துஞ்சல் காதல் சொற்றுணை மற்று
அஞ்செழுத்துண்மை அருளியதாகும் என்றார்.

இப்பகுதியில் சம்பந்தர் பெருமான் தனது பூணூற் சடங்கின்போது பாடிய காந்தார பஞ்சமப் பண்ணில் அமைந்த "துஞ்சலும் துஞ்சலிலாத போழ்தினும்" எனத் தொடங்கும் பஞ்சாக்கரப் பதிகமும், சம்பந்தப் பெருமானின் திருமணத்தின்போது தோன்றிய சோதியிற் கலக்கும்போது பாடிய கௌசிகப் பண்ணிலமைந்த "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார்" எனத் தொடங்கும்

நமச்சிவாயத் திருப்பதிகமும், திருநாவுக்கரசு நாயனாரைச் சமணர்கள் கல்லுடன் கட்டிக் கடலில் இட்ட போது கல்லே தோணியாக மிதக்கச் செய்த காந்தார பஞ்சமப் பண்ணில் அமைந்த “சொற்றுணை வேதியன்” எனத் தொடங்கும் நமச்சிவாயத் திருப்பதிகமும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பாண்டிக்கொடுமுடிப் பதியில் பாடிய பழம்பஞ்சுரப் பண்ணில் அமைந்த “மற்றுப்பற்றெனக்கின்றி நின் திருப்பாதமே மனம் பாவித்தேன்” எனத் தொடங்கும் பதிகமுமாக மூவர் முதலிகளும் பாடிய பஞ்சாக்கரப் பதிகங்கள் நான்கும் இடம்பெற்றுள்ள சிறப்பு நோக்கத்தக்கது.

4. **கோயில் திறம்** எனும் பகுதி

ஆரூர் தில்லை காட்டூர் மூன்றும்
சீரார் கோயில் திறமையதாகும் என்பார்.

இங்கு சிவாலயங்களின் திருவருள்திறம் கூறும். சம்பந்தப் பெருமானின் இந்தளப் பண்ணில் அமைந்த “ஆரூர்தில்லையம்பலம்” எனத் தொடங்கும் சேத்திரக் கோவையும் திருநாவுக்கரசு நாயனாரின் சேத்திரக் கோவையாகிய “தில்லைச் சிற்றம்பலமும்” எனத் தொடங்கும் திருத்தாண்டகப் பதிகமும். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பழம்பஞ்சுரப் பண்ணில் அமைந்த “காட்டூர்க்கடலே கடம்பூர்மலையே” எனத் தொடங்கும் ஊர்த்தொகைப் பதிகமும் அமைந்துள்ளன. இப்பகுதியில் மூவர் முதலிகளும் சிவாலயப் பெயர்களை முன்வைத்துப் பாடிய தேவாரப் பதிகங்கள் இடம் பெறுகின்றன.

5. **சிவனுருவம்** எனும் பகுதி

ஓருரு வரிய பாளை வடியே
மருவார் என்ற வண்டமிழ் ஐந்தும்
திருவார் மேனித் செய்தியதாகும். என்பதாகும்.

இதில் சம்பந்தப் பெருமானின் வியாழக் குறிஞ்சிப் பண்ணில் அமைந்த “ஓருருவாயினை” எனத் தொடங்கும் திருவெழு கூற்றிருக்கையும், சம்பந்தப் பெருமான் திருக்கடவூர் மயானத்தில் பாடிய காந்தாரப் பண்ணில் அமைந்த “வரிய மறையார் பிறையார்” எனும் பதிகமும்,

திருநாவுக்கரசுநாயனார் கோயில் எனும் தில்லையிற் பாடிய “பாளையுடைக்கமுகு” எனத் தொடங்கும் கோயில் விருத்தமும், அவரே திருப்பூவணத்தில் பாடிய “வடியேறுதிரி சூலம் தோன்றும் தோன்றும்” எனும் திருத்தாண்டகமும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கடவூர் மயானப் பதியில் பாடிய பழம்பஞ்சுரப் பண்ணில் அமைந்த “மருவார் கொன்றைமதி சூடி” எனும் பதிகமும் இடம் பெற்றுள்ளன. இவை சிவபெருமானின் திருவுருவக் காட்சியை மனக்கண்முன் நிறுத்துவனவாகும்.

6. **திருவடிகள்** எனும் பகுதி

பொடியுடை அரவணை அந்தணாளன்
அடியிணை தந்த அருளேயாகும், எனப்படுகின்றது.

இதில் சம்பந்தப் பெருமான் திருவாழ்கொளிப்புத்தூரில் பாடிய தக்கராகப் பண்ணில் அமைந்த ''பொடியுடைமார்பினர்'' எனும் பதிகமும், திருநாவுக்கரசர் திருவதிகையில் பாடிய "அரவணையான் சிந்தித்தரற்றும் அடி" எனத் தொடங்கும் திருவடித்திருத்தாண்டகமும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்புன்கூரில் பாடிய தக்கேசிப் பண்ணில் அமைந்த "அந்தணாளனுன் அடைக்கலம் புகுத" எனத் தொடங்கும் பதிகமும் இடம்பெற்றுள்ளன. இவை திருவடிச் சிறப்பினை ஓதுகின்றன.

7. **அருச்சனை** எனும் பகுதி

பந்து வேற்றா கொன்றிவை மூன்றும்
நந்தலில் அருச்சனை நாட்டியதாகும் எனப்படுகிறது.

இதில், சம்பந்தப் பெருமான் திருப்பூந்தராயில் பாடிய காந்தார பஞ்சமப் பண்ணில் அமைந்த "பந்து சேர்விரலாள்" எனும் பதிகமும், திருநாவுக்கரசர் ஸ்ரீகயிலாயம் பற்றிப் பாடிய "வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி" எனும் திருத்தாண்டகமும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கழுக்குன்றத்தில் பாடிய நட்டபாடைப் பண்ணில் அமைந்த "கொன்று செய்த கொடுமையால்" எனத் தொடங்கும் பதிகமும் அமைந்துள்ளன.

8. **அடிமை** எனும் பகுதி

வேய் குலம் தில்லை எனுமிவை மூன்றும்
நாயனும் அடிமையும் நாட்டியதாகும் எனப்படுகிறது.

இதில், திருஞானசம்பந்தர் பாடிய பியந்தைக்காந்தாரப் பண்ணில் அமைந்த "வேயுறுதோளிபங்கன்" எனத் தொடங்கும் கோளறு பதிகமும், திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாரூரில் பாடிய கொல்லிக் கௌவாணப் பண்ணில் அமைந்த திருத்தொண்டத்தொகையும் அமைந்துள்ளன.

இவ்விதம் அகத்திய மாமுனிவர் அடங்கன் முறையின் சாரமாகத் திரட்டிக் கொடுத்த தேவாரத் திரட்டு "எண்ணரும் அடங்கல் யாவையுமுணரும் புண்ணிய மிவையொடு பொருந்தும் என்றனர்" என்பதற்கேற்ப பண்ணுடனும் பக்தியுடனும் தினமும் ஓதியுணர்ந்து பிறவிப்பிணி நீங்கி முத்திப்பேறுபெற முயல்வோம்.

## திருமுறைப் பெருவிழா வாழிவாழி

பன்னிரு திருமுறையின் பான்மை கேட்டு
பத்தியுடன் நாடோறும் ஓது வார்க்கு
இன்னலும் இடைஞ்சலும் எதுவும் செய்யா
இரவோ டிரவாக ஒழிந்து போகும்
நினைப்ப தெல்லாம் நெஞ்சத்தில் கனிந்திடவும்
நீணிலத்தில் நெடுநாளின் புற்றிருந்திடவும்
கன்னலாய் இனிக்கின்ற திருமு றையை
கவலைக்கு மருந்தாகக் கொண்டு வாழ்வோம்

திருநீறு அணியாரைத் துன்பம் சூழும்
துயர்கொடுக்கும் பெருநோயும் வந்து தாக்கும்
பெருநோய்கள் வந்தணையா திருப்ப தற்கு
அருமருந்தாம் வெண்ணீற்றைப் பூச வேண்டும்
திருமலியும் பெரும்புராணத் தடியா ரெல்லாம்
திருநீற்றின் மகிமைக்குப் பொருளாய் நின்றார்
பெருநிதியாம் திருநீறு என்று போற்றி
எல்லோரும் இங்கிதனை ஏத்தி வாழ்வோம்.

ஏவல்பில்லி சூனியங்கள் எல்லாம் இன்றே
எமைவிட்டு இறையருளால் மாறிப் போகும்
ஆவலுடன் திருமுறையைப் படிப்போர் நெஞ்சில்
அன்புடனே சத்தியமும் தருமம் தோன்றும்
தாவிவரும் கங்கைபோல் தேச மெங்கும்
அறநெறியும் நீதியுடன் தழைத்து ஓங்கும்
காவலுடன் சமுதாயம் நிலைக்க வேண்டில்
கட்டோடு வன்செயலும் நீறால் மாயும்.

மேனாட்டார் சைவத்தின் பெருமை தன்னை
மேதினியில் சரித்திரத்தின் சான்று காட்டி
வானுறையும் தெய்வத்தின் மாட்சி சொன்னார்
சைவத்தின் தத்துவத்தில் மகிழ்ந்து போனார்
தேனாக இனிக்கின்ற தேவாரத் திருமுறைகள்
வாழ்க்கைக்கு வழிகாட்டும் தீபங்கள்
ஆனதனால் திருமுறைகள் அனைத்தும் சொல்லும்
அற்புதமாம் சைவநெறி போற்றி வாழ்வோம்

அருமறையின் பெருமையினை எடுத்துக் கூற
அமைந்ததொரு விழாவாம் இம்மா நாட்டில்
திருமுறையின் பொக்கிஷமாம் பெரு நிதியை
அள்ளியள்ளித் தந்திடுவார் சான்றோ ரிங்கே
தருமுறையில் சைவரெல்லாம் சார்ந்து நின்று
பிறவிப்பிணி யறுத்து பெரும்பதவி பெற்றிட
பெருமையுடன் நாம்வாழ வழி வகுக்கும்
திருமுறைப் பெருவிழா வாழிவாழி.

சைவப்புலவர் கி. வெள்ளைச்சாமி.

சிவமயம்

# பன்னிரு திருமுறைகளின் உட்கிடக்கை

- சைவப்புலவர் திருமதி. இந்திராணி பொன்னுத்துரை.

"**அரிது அரிது மானிடராதல் அரிது**" என்ற ஔவையாரின் வாக்கிற்கிணங்க மனிதப்பிறவியே பரம்பொருளை உணர்ந்து உய்யக் கூடிய பிறவியெனவும் அப்பிறவியை பயன்மிக்கதாக அமைத்துக்கொள்ள வேண்டும் என்பது குறிக்கோளாக அமைய வேண்டும், என்பது சிவஞானச் செல்வர்களாகிய திருமுறை ஆசிரியர்களின் உட்கிடக்கையாகும். இதனை அப்பர் பெருமானின்

"**வாய்த்தது நந்தமக் கீதோர் பிறவி மதித்திடுமின்**" (4.81.5),
"**மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே**" (4.81.4)

என்ற பதிகம் தெளிவு படுத்துகிறது. இத்தகைய மனிதப் பிறவியின் மூலம் தான் இறைசிந்தனை, வினைநீக்கம், அன்புடைமை, அஞ்சாமை, சமுதாய நலன் இவைகள் பெற்று இறைவனோடு ஒன்றி முத்தியடையலாம் என்பது அவர்களது உட்கிடக்கையாகும். இதையே திருமூலரும் "**இன்பம் பிறவிக் கியல்வது செய்தவன்**" (திருமந்திரம் 281) என்று குறிப்பிடுகிறார்.

உலகியல் வாழ்க்கையை முறையாக அமைத்துக் கொண்டு இறை சிந்தனையில் வாழ்வதே வாழ்க்கை என்பதை அப்பர் சுவாமிகள் "**பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானை பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.**" (6.1.1) எனப்பாடுகின்றார். மேலும் இறைவனை முதன்மைப்படுத்தியே நாளைத் தொடங்கவேண்டும் என்பதை "**தொழுது தூமலர் தூவித் துதித்துநின்**" (5.21.8) என்கிறார். அதேவேளை இறைஉணர்வின்றி பொழுதைக் கழிக்கும் மாந்தரது கணக்கையும் ஆண்டவன் எழுதிவைக்கிறார் என்ற கருத்தும் மேற்படி பாடலில் காணக்கூடியதாகவுள்ளது.

மனிதப்பிறப்பை பாழ்படுத்தாமல் இருக்க போற்றுதற்குரிய அறங்களையும், நீக்க வேண்டிய அதர்மங்களையும் போற்றியும் நீக்கியும் வாழவேண்டும். என்பதை

"**குற்றொ ருவ்வரைக் கூறை கொண்டு கொலைகள் சூழ்ந்த களவெலாம்**
**செற்றொ ருவ்வரைச் செய்த தீமைகள் இம்மை யேவருந்திண்ணமே**" (7.35.4)

என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடுகின்றார், இக்கருத்து "**பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா பிற்பகல் தாமே வரும்**" என்னும் திருக்குறட் கருத்தை ஒத்து தமிழரின் விழுமிய எண்ணத்தின் வெளிப்பாடாக அமைகின்றது.

வினை நீக்கம் பற்றிக் குறிப்பிடுகையில் திருமுறை ஆசிரியர்கள் மெய்யடியார்களுக்கு வினை நீக்கம் நிச்சயம் என்பதை உறுதியுடன் முன்வைக்கின்றனர். இக்கருத்துப் பற்றியே சம்பந்தர் சுவாமிகள்

"**ஓதிநாளு முன்னையேத்து மென்னைவினை யவலம்**
**வாதியாமே வந்துநல்காய் வலிவலமே யவனே.**" (1.50.9)

என்று அருளிச் செய்திருக்கின்றார். இவருடைய பதிகங்களில் 75% க்கும் மேலாக வினை நீக்கக் கருத்துக்கள் இடம் பெற்றுள்ளதைக் காணலாம்.

**"திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே"** (1.1.11)

**"ஞானசம்பந்தன்வாய் நவிற்றிய தமிழ்மாலை**

**ஆத ரித்திசை கற்றுவல் லார்சொலக் கேட்டுகந் தவர்தம்மை**

**வாதி யாவினை மறுமைக்கும் இம்மைக்கும் வருத்தம்வந் தடையாவே.**"(2.106.11)

"உடைய தமிழ்பத்தும் உணர்வார் அவர்கள் தொல்வினைகள் ஒல்கும்உடனே"(1.11)

**"பாதந்தொழுவார் பாவந்தீர்ப்பார் பழன நகராரே"** (1.67.1)

**"நினைத்துத்தொழுவார் பாவந்தீர்க்கும் நிமல ருறைகோயில்"** (1.69.6)

என்பன போன்ற பதிகவரிகள் சம்பந்த சுவாமிகளின் வினைநீக்கக் கருத்தை எடுத்தாளும் ஒருசில எடுத்துக்காட்டுகளாகும்.

அப்பர் சுவாமிகளும் வினைநீக்கம் பற்றி

**"நமச்சி வாயபத்**

**தேத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே.**" (4.11.10) எனப் பாடியுள்ளார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளும்

**"நாண னைத்தொண்டன் ஊரன் சொல்லிவை**

**சொல்லு வார்க்கில்லை துன்பமே.**" (7.48.10) என்று வினைநீக்கம் பற்றிப் பாடியுள்ளமை துன்பத்தை நீக்க ஞானமே வடிவான பன்னிரு திருமுறைகள் அன்றிப் பிறிதொன்றால் முடியாது என்று வலியுறுத்தும் பாங்கில் அமைந்துள்ளமையைக் காணலாம்.

சிவநெறி நின்ற திருமுறை ஆசிரியர்கள் யாவருமே இறைவன் பாதம் பணிந்து அவன் திருவருளால் அஞ்சாமை என்னும் நெஞ்சுரம் கொண்டவர்களாகவே வாழ்ந்துள்ளனர். இதனை நாவுக்கரசர் பாடிய

**"நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்"** (6.98.1) என்ற பாடலின் மூலம் அறியலாம்.

திருமுறை ஆசிரியர்கள் சமுதாயச் சிந்தனையாளர்களாகவும் மேன்மையுற்று விளங்கியுள்ளமையை **"சாத்தி ரம்பல பேசுஞ் சழக்கர்காள்**

**கோத்தி ரமுங் குலமுங்கொண் டென்செய்வீர்"** (5.60.3)

என்ற நாவுக்கரசர் பாடல் நிருபிக்கின்றது. மாணிக்கவாசக சுவாமிகளும்

**"சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறும்"** (8.31.5) என்ற பாடலில் இது பற்றிக் குறிப்பிடுகின்றார்.

இருப்பவர் இல்லாதார்க்கு இயன்றவரையில் ஈதலை செய்யும் உயர்ந்த சீலத்தை திருமூலர் "**ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்...... காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே**" (திருமந்திரம் 250) இவ்வாறு பாடியுள்ளார், இக்கருத்தை பெரிய புராணத்தில் கூறப்படும் 63 நாயன்மார்களும் தங்களின் இறைநெறிக் கொள்கையாகக் கொண்டு வாழ்ந்தமையைக் காணலாம்.

எனவே தமிழரின் ஆன்மிக வாழ்வியல் சிந்தனைகளை பதிவு செய்த சிவநெறிச் செல்வர்களின் கருணையை எத்துணை புகழ் மெச்சிப் பேசினும் அது பொருத்தமானதாகும். உலகியலில் வாழ்வாங்கு வாழவும் அருளியலில் உன்னத நிலையான வீடுபேற்றினை அடையவும் இவர்கள் காட்டிய வழியைப் போற்றி நிற்பவையாக பன்னிரு திருமுறைகள் விளங்குகின்றன என்பதைக் காணலாம்.

உ

சிவமயம்

# அகில இலங்கைத் திருமுறை மன்றம்

- பண்டிதர் வ. பேரின்பநாயகம், தலைவர் அகில இலங்கைத்திருமுறை மன்றம்.

நாளும் இன்னிசையால் நற்றமிழ் பாடி நலம் பெற நல்லூர் முருகன் ஆலய முன்றலில் சிவத்திரு சி. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் நாயன்மார்கட்டு நாதன் என அழைக்கப்படும் திரு கா. இரகுநாதனும் பல அன்பர்களின் ஆதரவுடன் 13.04.1976இல் அகில இலங்கைத் திருமுறை மன்றத்தை ஆரம்பித்தனர். சைவப்பெரியார் சித்தாந்த சிரோன்மணி மு. மயில்வாகனம் அவர்களின் ஆலோசனையுடன் ஆரம்பிக்கப்பட்ட இம்மன்றம் வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க மிக்க சுறுசுறுப்புடன் பணியாற்றத் தொடங்கியது.

நல்லைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள், காசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள், சிவதர்மவள்ளல் க. கனகராசா (மில்க்வைற்), சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி முதலானோர்கள் மன்றத்தின் போஷகர்களாக இருந்து வளர்த்தார்கள்.

மூதறிஞர் க. சொக்கலிங்கம் M.A. அவர்கள் தலைவராகவும், தேவார இசைமணி கே. எஸ். ஆர். திருஞானசம்பந்தன் அவர்கள் செயலாளராகவும், சிவபூசாதுரந்தரர் சி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பொருளாளராகவும், சைவாசார சீலர்கள் பதினொருவர் செயற்குழு உறுப்பினராகவும் செயற்பட்டனர். அறிவாற்றல் மிக்க சொக்கன் அவர்கள் பதினெட்டு ஆண்டுகள் தலைவராக அரும்பணி ஆற்றியுள்ளார். 1994ஆம் ஆண்டிலிருந்து திரு. வ. பேரின்பநாயகம் அவர்கள் தலைவராகப் பணியாற்றுகின்றார். நால்வர் குருபூசைகள் உரிய தினங்களிற் கொண்டாடப்படுகிறது. மாதந்தோறும் பூரணை தினத்தில் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல் நடைபெறுகின்றது. அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் திருமுறைப்பணியை ஊக்குவிக்கும் முறையில் திருவாவடுதுறை ஆதீனம் நால்வர் திருவுருவங்களைத் தந்துதவியுள்ளது. நால்வர் முன்னிலையில் திருமுறைப் பாராயணம் பக்தி பரவசமாக நடைபெறுகிறது. 2004ஆம் ஆண்டு சித்திரை வருடப்பிறப்புத் தினத்தில் நீராவியடி வீரகத்திப் பிள்ளையார் ஆலயத்தில் மாதமொரு திருமுறை ஓதும் நிகழ்ச்சி ஆரம்பமாகியது. ஒவ்வொரு மாதமும் வெவ்வேறு ஆலயங்களுக்கு நால்வர் பெருமக்களின் திருவுருவங்களை ஊர்வலமாக எழுந்தருளச் செய்து ஆங்காங்கே ஒவ்வொரு திருமுறையாக வரிசையாகப் பாராயணஞ் செய்யப்படுகின்றது. யாழ்ப்பாணம் கைலாய பிள்ளையார் கோயிலிற் பாராயணஞ்செய்து புறப்படும்போது நால்வர் பெருமக்களின் எழுச்சிக்காக ஓர் அழகான பல்லக்கு அன்பளிப்பாக உதவப்பட்டது. அருமையான அப்பல்லக்கில் நால்வர் பெருமக்களின் பவனியைக் காண்கின்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாகக் கண்டவர் பாராட்டுகின்றனர். துர்முகியாண்டு யாழ்ப்பாணம்

இந்துப்பேரவை நடராசர் சந்நிதியில் மாதமொருமுறை முற்றோதல் நிகழ்ச்சி நடத்தியது. ஏவிளம்பி வருஷப்பிறப்புத்தினத்தில் யாழ் சிவதொண்டன் நிலையத் திருமுறை மண்டபத்தில் நால்வரை எழுந்தருள வைத்து மாதமொரு திருமுறைப் பாராயணம் பக்திபூர்வமாக நடைபெறுகிறது.

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் நாளாந்த நிகழ்ச்சியாக சித்திரை மாதம் தொடங்கி பங்குனிமாத இறுதிவரை மாதமொரு திருமுறைப் பாராயணம் நிகழ்கின்றது. நிறை மதி நாளாகிய பூரணைதினத்தில் செய்யப்படுகின்ற அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல் மாதாந்த நிகழ்ச்சியாக விளங்குகின்றது. ஆடி, வைகாசி பூரணைதினங்களில் நிகழும் திருமுறைப் பெருவிழா வருடாந்த நிகழ்ச்சியாகவும் நடைபெறுகின்றன.

"வேதாகமத் திருமுறைகளுக்கு ஆடிப் பூரணையிலும் வைகாசிப் பூரணையிலும் விசேஷ பூசை செய்தல் வேண்டும். திருமுறையேடுகள் நெடுநாட் பயிலப்பட்டு முறிதல் நெரிதல் எழுத்துத் தெரியாமை முதலிய பல குற்றங்களைப் பொருந்தினால் பிறையறுவித்து எழுதவல்லவர்களாலே எழுதுவித்து மைக்காப்புச் சாத்தி அந்தத் திருமுறையைப் பூசித்தல் வேண்டும். பின்பு பழைய திருமுறையைப் பசு நெய்யிலே தோய்த்துக் கடவுளுக்கு ஓமஞ்செய்தல் வேண்டும்."

என ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நாலாம் பாலபாடத்தில் மடம் என்ற தலைப்பில் வரும் கட்டுரையில் ஏழாம் பந்தியாக எழுதியுள்ளார். நாவலர் பெருமான் இக்கருத்தைத் தெரிவிப்பதற்கு மூலகாரணமாக உள்ளது தணிகைப் புராணமாகும்.

**ஆடிவை காசித் திங்க ளடுத்தபூ ரணையிற் பூசை**
**நாடினர் தாமு முன்னை நற்பயன் பற்று வார்கள்**
**ஏடெழு தூசி பாச மீந்தவ ரெழுதி வைப்போர்**
**பீடுறப் பயில்வோர் சொல்வோர் பெரிதரும் பயன்க ளாய்வோர்.**

என்ற பாடல் தணிகைப் புராணத்தில் அகத்தியன் அருள் பெறு படலத்தில் வரும் பாடலாகும். இதனை உணர்ந்து அகில இலங்கைத் திருமுறை மன்றம் ஆடி, வைகாசி மாதங்களில் வருகின்ற பூரணைகளில் திருமுறைச் சுவடிகளையும் திருமுறை தந்தருளிய நால்வரையும் பவனிவரச்செய்து பூசைசெய்து திருமுறை வல்லாரை கௌரவித்து விழாக் கொண்டாடி வருகிறது.

திருமுறைகளைப் பொருளுணர்ந்து பண்ணோடு பாடவல்லவர்களை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் நாவலர் பாடசாலையிலும், யாழ் சிவதொண்டன் நிலையத்திலும் தேவார இசைமணி இரா. திருஞானசம்பந்தன் அவர்களை அழைத்துப்

பண்ணிசை வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. சனி ஞாயிறு விடுமுறை தினங்களில் நடக்கின்ற இவ்வகுப்புக்களில் பங்குபற்ற முடியாதவர்களாக மாணவர்கள் கஷ்டப்படுகின்றனர். வண்ணை குளங்கரை காமாட்சி அம்பாள் ஆலய மண்டபத்தில் மேற்படி ஆலய தர்மகர்த்தா சபையினர் உதவியுடன் ஒரு பண்ணிசை வகுப்பு மாணவர்களுக்கு வசதியாக இரவில் ஒருமணித்தியால வகுப்பு நடாத்தி நவசந்திப்பாடல்கள், மகோற்சவகாலத்தில் ஒழுங்காகப் படிக்கப் பயிற்சிகொடுக்க முயற்சித்து வருகின்றோம். மேற்படி ஆலய அறங்காவலர்கள் இம்முயற்சிக்கும் பேராதரவு தருவதாக இருக்கிறார்கள்.

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நாற்பது வருடங்களுக்கு மேலாக நற்பணியாற்ற முன்னின்று உழைத்த உத்தமர் சிவபூசாதுரந்தரர் சி. கிருஷ்ணமூர்த்தி ஆவார். அவரது நன்முயற்சியைப் பெரிதும் பாராட்டுகின்றோம்.

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் சேவையினைக் கண்டு சைவத்தமிழ்ப் பெரியார்கள் பாராட்டுகின்றனர். 1978ஆம் ஆண்டு இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் மேற்படி மன்றத்தினரைத் தம் இல்லத்திற்கு அழைத்து, பன்னிரு திருமுறைகளைப் பாராயணஞ் செய்வித்து போற்றிக் கௌரவித்தார்.

கலாநிதி பண்டிதமணி மு.கந்தையா, கல்விக்காருண்யன் E.S.P. நாகரட்ணம் முதலிய பெரியோர்கள் திருமுறை மன்றத்தினரைத் தம் இல்லங்களுக்கு அழைத்து திருவாதிரைத் தினத் திருமுறைப் பாராயணஞ் செய்வித்துப் பேறு பெற்றனர்.

1982 - 1984ஆம் ஆண்டுகளில் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் சேவைகளை மிகவும் பாராட்டினர். திருமுறை மன்றம் வெளியிட்ட திருமுறை இறுவட்டுக்களுக்கு வாரியார் சுவாமிகள் தம்வாக்கினாலே வெளியீட்டுரை வழங்கிச் சிறப்பித்துள்ளார்.

திருமுறைப் பெருவிழா நடைபெறும் வேளைகளில் திருமுறைச் சுவடிகள் எழுந்தருளுவதற்காக அழகிய யானை வாகனம் கலாவித்தகர் சீவரத்தினம் அவர்களால் வழங்கப்பட்டது.

மாண்புமிகு அமைச்சர் தி. மகேஸ்வரன் அவர்கள், 2000ஆம் ஆண்டு மன்றத்தின் சேவையைக் கௌரவித்து முச்சக்கரவண்டி ஒன்று அன்பளிப்பாகத் தந்துள்ளார்கள். மேற்படி அமைச்சின் உதவியுடன் ஒலிபெருக்கி கருவிகள் மன்றத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு உபயோகிக்கப்படுகின்றன. இவற்றைக் கண்ணும்கருத்துமாகப் பாதுகாத்து உதவிவந்த அமரர் திரு. சி. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் சேவை பாராட்டுக்குரியது.

உ

# திருமுறையும் இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபையும்

- இணுவையூரான்

இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபையானது ஆன்மிகப் பண்பு கொண்ட சமுதாயத்தினை உருவாக்க வேண்டும் என்னும் நோக்கம் கொண்டு 1976ஆம் ஆண்டு ஆவணி மாத கார்த்திகை நட்சத்திரத்தில் ஆலயத்தின் திருவிழாவின் போது இடப்புறத்தில் காணப்படும் பலாமரத்தின் கீழ் ஆன்மிக செயற்பாடுகளைக் கொண்டிருந்த தொண்டர்களால் கருவூலம் அமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டது என்பது கண்கூடு ஆகும்.

முருகப் பெருமான் ஆலயத்தைத் தினமும் வழிபாடு செய்து தொண்டு செய்யும் ஓம் முருகா என அழைக்கப்படும் இராசு அண்ணர் என்பவர் மரத்தடியில் கூடியிருந்த எம்மை நோக்கி, இங்கு தொண்டு செய்வோர் யாவரும் ஓர் ஒழுங்குக்கு அமைய நடவுங்கள் என்றும் மஹோற்சவத்தின் போது ஆலயத்தின் முன்பாக அடியவர்கள் இளைப்பாறித் தாகசாந்தி செய்யப் பந்தல் ஒன்றும் அமையுங்கள் என்றும்கூறி ஒரு 20 பக்கக் கொப்பியினையும் 10 ரூபா பணத்தையும் ந. பரமேஸ்வரன் என்பவரிடம் கையளித்தார். அக்குழுவிலிருந்த தொண்டர்கள் யாவரும் ஓம் முருகா எனும் அடியவரின் ஆலோசனைக்கு அமைவாகத் தொண்டு செய்ய ஒருமுகப்பட்டு திரு. நவரட்ணம் பரமேஸ்வரன் என்பவர் முருகப்பெருமானின் கட்டளையாக இவ்வாலோசனைக்கு அமைவாகவும் இங்கு கூடியிருந்த நண்பர்களைத் துணையாகக் கொண்டு இளந்தொண்டர் சபை என்னும் அமைப்பினை உருவாக்கினார். அன்று தொட்டு இன்றுவரை இவ்விறை கைங்கரியம் தொடர்வது இறையருளே ஆகும்.

சபையின் ஆரம்பகாலங்களில் இச்சபைக்கெனக் கட்டிடம் ஒன்றும் இருக்கவில்லை ஆனால் சபையானது தண்ணீர்ப்பந்தல் அமைத்தும் ஆலயத்தில் சரியைத் தொண்டுகள் செய்தும் கந்தசஷ்டி காலத்தில் கவசம் பாராயண நூலினை அச்சிட்டு இலவசமாக வழங்கியும் தமது இறைபணியை மேற்கொண்டிருந்தது. சபைக்கு நிரந்தர கட்டிடம் ஒன்று தேவை எனக் கருதிய தொண்டர்கள் உடுவில் கிராம சபைத்தலைவர் திரு.ச. முத்துலிங்கம் அவர்களால் ஆலய வடக்கு வீதியில் "அன்னதானமடம்" என்னும் நோக்கில் நிறுவப்பட்டு அரைவாசி நிலையில் இருந்த கட்டிடத் தொகுதியினை அவரின் அனுசரனையுடன் காணிக்காரர்கள் பொறுப்பேற்று பல வருடங்களாகியும் முடிவுறாதிருந்த கூரை வேலை, நிலவேலை என்பவற்றை அடியவர்களின் பொருளுதவியுடன் பூர்த்தி செய்தனர். 1979 ஆம் ஆண்டளவில் பூர்த்தி செய்யப்பட்ட இக்கட்டிடத் தொகுதிக்குச் "சைவப்பணிமனை" என்னும் திருநாமஞ்சூட்டி இளந்தொண்டர் சபையின் ஆத்மீக நடவடிக்கைகளை இம்மண்டபத்தில் மேற்கொள்ளத் தொடங்கினர்.

இச்சபையின் திருமுறைசார் நடவடிக்கையாக 1980 ஆம் ஆண்டளவில் திரு. இராசரத்தினம் (இளைப்பாறிய தபால் அதிபர்) அவர்களைப் பண்ணிசை ஆசிரியராகக் கொண்டு திருமுறை வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. இவ்வகுப்பானது மாலை வேளைகளில் திங்கள், வெள்ளி ஆகிய இரு தினங்களில் சைவப்பணிமனை மண்டபத்தில் இடம்பெற்றது. இவ்வகுப்பில் வயது வந்தவர்களும் பண்ணிசையினைப் பயின்று கொண்டனர்.

திரு. இ. இராசரத்தினம் அவர்களைத் தொடர்ந்து சங்கீத பூஷணம் திரு. வி. சிவஞானசேகரம் அவர்கள் திருமுறைப் பண் வகுப்புக்களை நடாத்தி வருகின்றார். வட இலங்கைச் சங்கீத சபையின் பாடத்திட்டத்திற்கமைவாக இவரால் மாணவர்களுக்குப் பாடங்கள் கற்பிக்கப்பட்டு வருகின்றன. ஆலய மகோற்சவ காலங்களில் காலைப்பூசை 5.30 மணியளவில் முடிவுற்றதும் மாணவர்கள் குழுவாகச் சேர்ந்து பக்கவாத்திய சகிதம் ஆலய மண்டபத்தில் திருமுறையினைப் பண்ணுடன் ஓதுவார்கள். இந்நிகழ்வு மஹோற்சவப் பெரும் திருவிழாவாகிய இருபத்தைந்து நாட்களும் காலை வேளைகளில் தவறாது நிகழும். பண்ணிசை நிகழ்வில் கலந்து கொள்ளும் மாணவர்கள் தேர்த்திருவிழாவின் போது பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்படுவார்கள். இந்நிகழ்வு இற்றைக்கு 35 வருட காலங்களிற்கும் மேலாக இவ்வாலய மண்டபத்தில் தொடர்ந்தும் நடைபெற்றுக் கொண்டு வருவது இறையருளே. கடந்த காலங்கள் பண்ணிசையாக காலை வேளை ஓதிய மாணவர்கள் இன்று பெரிய பண்ணிசை வித்தகர்கள், சங்கீத வித்துவான்கள், இசையமைப்பாளர்கள், விரிவுரையாளர்கள். இச்சபையினரால் திருமுறை விழாக்களும் காலத்திற்கு காலம் பெருவிழாவாகக் கொண்டாடப்பெற்று வருகின்றன. முதல் முதலாகத் திருமுறை விழா இச்சபையினரால் 1986 ஆம் ஆண்டளவில் கொண்டாடப்பட்டது. இவ்விழாவின் போது சங்கீதபூஷணம் வி. சிவஞானசேகரம் இசைப் பேராசிரியர் நா.வி.மு நவரத்தினம், சங்கீத பூஷணம் செல்வி. நாகம்மா கதிர்காமர் ஆகியோர் சபையினரால் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

தொடர்ந்து 1989 ஆம் ஆண்டளவில் நடைபெற்ற திருமுறை விழாவின் போது திருமுறை ஏடுகள் யானை மீது ஏற்றப்பட்டு சமயகுரவர் நால்வரது திருவுருவப்படங்களும் அலங்கரிக்கப்பட்டு இணுவில் அருணகிரிநாத சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் நின்றும் ஊர்வலமாக இணுவில் கந்தசுவாமி கோவிலை வந்தடைந்து விழாச்சிறப்பிக்கப்பட்டது. விழாவிலே மாணவர்களது சித்திரக் கண்காட்சியும் இடம்பெற்றது.

1991ஆம் ஆண்டளவில் திருமுறை விழாவானது மூன்று நாட்கள் பெருவிழாவாக பெருமதிப்பிற்குரிய ஆறுதிருமுருகன் தலைமையில் கொண்டாடப்பட்டது. விழாவின் போது சமயப்பணியாற்றிய பெரியோர்கள் "மூதறிஞர்" என்னும் பட்டம் வழங்கப்பட்டு "மஞ்சவிருது" வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்கள். அன்றைய மூன்று நாள் விழாக்களும் முறையே திருமுறையில் இயல், திருமுறையில் இசை, திருமுறையில் நாடகம் என்னும் தலைப்புக்களில் இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து 2002 ஆம் ஆண்டளவில் மாண்புமிகு அமைச்சர் மகேஸ்வரனது ஏற்பாட்டில் திருமுறைவிழா தொடர்ச்சியாக மூன்று நாட்கள் கொண்டாடப்பட்டது. அமைச்சர்களால் கலாசார மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது **100′** நீளமும் **40′** அகலமும் கொண்டதாக இக்கலாசார மண்டபம் பொதுமக்களின் நிதியுதவியுடன் பூர்த்தியாக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது.

நிறைவாக சைவப்பணிமனை மண்டபமானது துறவி கந்தையா சுவாமிகளின் (கோண்டாவில் குடைச்சுவாமியார்) யோக நித்திரைக்கான இடமாக மண்டபம் பூர்த்தியாகாமல் இருந்த காலப்பகுதிகளில் சுவாமிகளால் பயன்படுத்தப்பட்டு வந்தது. சுவாமிகள் சமாதியடைந்ததைத் தொடர்ந்து இறை திருவடிகள் மண்டபத்தின் பூசை அறையில் பிரதிஷ்டை செய்யப்பெற்று வணங்கப்பெற்று வருகின்றது. இதன் இறை வெளிப்பாடுகளே இளந்தொண்டர் சபையின் இன்றைய ஆன்மிகக் கலை வெளிப்பாடுகள் எனலாம். தற்போது இம்மண்டபத்தில் நடைபெற்று வரும் திருவாவடுதுறை ஆதீன திருமுறை, சைவசித்தாந்தப் பயிற்சி மையத்தின் வெளிப்பாடுகளும் இறையருளே. இங்கு இடம்பெறும் ஆதீனப் பயிற்சி வகுப்புகளான திருமுறை வகுப்புகளில் 25 மாணவர்களும், சைவசித்தாந்த வகுப்பில் 32 மாணவர்களும் பயிற்சி பெற்று வருகின்றனர். இவ்விறை கைங்கரியங்கள் மேன்மேலும் சிறப்புற பரம்பொருளின் திருவடிக் கமலங்களைத் தினமும் மனம், மெய்களால் வணங்கித் துதிப்போமாக.

13ஆம் பக்கத் தொடர்ச்சி...

32. "காரைக்காற் பேய் சொல் பரவுவார் ஆராத அன்பினொடு
அண்ணலைச் சென்று ஏத்துவார் பேராத காதல் பிறந்து" 11- 4- 101

33. "நன் முருகாற்றுப்படையைத் தற்கோல நாள்தோறும்
சாற்றினால் முற்கோல மாமுருகன் வந்து மனக்கவலை
தீர்த்தருளித் தான்நினைத்த தெல்லாம் தரும்" 11- 18- 10

பயன் எனும் போது ஓசைப் பயன், பொருட்பயன் என்ற வகையில் அமைந்து அருள்பெறும் நிலையாகும். ஓசைப் பயன் என்பது பண்ணுடனும், தாளத்துடனும், பொருந்திய ஒலி நிலையிலான குரல் ஓசை. இது மந்திர உச்சாடன நிலையிலான ஒலி போன்றதாகும். இதற்கும் பயன் உண்டு. பொருட்பயன் என்பது பாடலின் கருத்தைச் சித்தாந்த தத்துவ நிலைகொண்டு பொருள் விளங்கும் வண்ணம் புணர்ச்சி பிரித்த நிலையில் ஓதல், இது "சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்" என்ற மணிவாசகர் கருத்தை உறுதி செய்வதாக அமைகின்றது. இதற்கும் பயன் உண்டு. எனவே ஓதல் முறையானது பயன்களைப் பெறக்கூடிய முறையில் அமையும் வண்ணம் நடைபெறுவது மிகமிக முக்கியமானதும், கவனத்திற் கொள்ளவேண்டியதுமாகும். இந்த நிலைப்பாட்டிலே சிந்திக்குமிடத்துத் திருமுறை முற்றோதல் செய்யும் சிவனடியார்கள் சுத்தாத்துவித சைவசித்தாந்த அடிசேர் முத்தியைப் பெறுதல் திண்ணம் என்ற உறுதி நிலை தெரிகின்றது.

சென்ற இதழின் தொடர்ச்சி...

# அகத்தியர் தேவாரத்திரட்டு உரைவிளக்கம்

## சுந்தரமூர்த்தி நாயனார் - திருக்கடவூர் மயானம்

7ஆம் திருமுறை பண் : பழம்பஞ்சுரம்

சிவனுருவம்

திருச்சிற்றம்பலம்

1. **மருவார் கொன்றை மதிசூடி மாணிக் கத்தின் மலைபோல**
**வருவார் விடைமேல் மாதோடு மகிழ்ந்து பூதப் படைசூழத்**
**திருமால் பிரமன் இந்திரற்கும் தேவர் நாகர் தானவர்க்கும்**
**பெருமான் கடவூர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே.**

(ப-ரை) மரு ஆர் - மணந்தங்கிய, கொன்றை - கொன்றை மலர் மாலையையும், மதி - பிறைத்திங்களையும், சூடி - திருமுடியில் அணிந்து, மாணிக்கத்தின் மலைபோல - மாணிக்க மலை போல, பூதப்படை சூழ - பூதப்படைகள் சூழ்ந்து வர, மகிழ்ந்து - விரும்பி, மாதோடு - உமாதேவியாரோடு, விடைமேல் வருவார் - இடபத்தை ஊர்ந்து வருகின்றவர், திருமால் பிரமன் இந்திரற்கும் - அரி அயன் இந்திரன் என்போர்க்கும், தேவர் நாகர் தானவர்க்கும் - தேவர்களுக்கும் நாகர்களுக்கும் அசுரர்களுக்கும், பெருமான் - தலைவராகிய, கடவூர் மயானத்து - திருக்கடவூர்த் திருமயானத்தி லெழுந்தருளி யிருக்கின்ற, பெரிய பெருமான் அடிகள் ஏ - பெரிய பெருமான் என்னும் இறைவரே யாவர் என்றவாறு.

2. **விண்ணோர் தலைவர் வெண்புரிநூல் மார்பர் வேத கீதத்தர்**
**கண்ணார் நுதலர் நகுதலையர் கால காலர் கடவூரர்**
**எண்ணார் புரமூன் றெரிசெய்த இறைவர் இமையோர் ஒருபாகம்**
**பெண்ஆண் ஆவர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே.**

(ப-ரை) விண்ணோர் தலைவர் - தேவர்களுக்குத் தலைவரும், வெண் புரி நூல் மார்பர் - வெண்ணிறமாகிய முறுக்கப்பட்ட பூணூலணிந்த திருமார்பினையுடையவரும், வேதகீதத்தர் - வேதப்பாட்டினை யுடையவரும், கண்ஆர் நுதலர் - கண்ணொடு கூடிய திருநெற்றியினை யுடையவரும், நகுதலையர் - நகுவெண்டலையை யுடையவரும், காலகாலர் - இயமனுக்கு இயமனானவரும், கடவூரர் - திருக்கடவூரில் எழுந்தருளி யிருப்பவரும், எண்ணார் புரம் மூன்று - பகைவருடைய முப்புரங்களையும், எரி செய்த இறைவர் - எரித்த தலைவரும், இமையோர் - தேவரும், ஒருபாகம் பெண் ஆண் ஆவர் - ஒரு பாகம் பெண்ணும் ஒரு பாகம் ஆணும் ஆகியவரும், மயானத்து - திருமயானத்தில் எழுந்தருளியிருக்கின்ற, பெரிய பெருமான் அடிகள் ஏ - பெரிய பெருமான் என்னும் இறைவரே யாவர் என்றவாறு.

3. **காயும் புலியின் அதளுடையர் கண்டர் எண்தோட் கடவூரர்**
**தாயும் தந்தை பல்லுயிர்க்குந் தாமே ஆய தலைவனார்**
**பாயும் விடையொன் றதுவேறிப் பலிதேர்ந் துண்ணும் பரமேட்டி**
**பேய்கள் வாழும் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே.**

(ப-ரை) காயும் புலியின் அதள் உடையர் - காய்தலையுடைய புலித்தோலை யுடையவரும், கண்டர் - நீல கண்டத்தை யுடையவரும், எண்தோள் கடவூரர் - எட்டுத் திருத்தோள்களையுடைய திருக்கடவூரரும், பல் உயிர்க்கும் - எல்லா உயிர்களுக்கும், தாயுந் தந்தை - அன்னையும் பிதாவும், தாமே ஆய தலைவனார் - தாமேயாகிய தலைவரும், பாயும் விடை ஒன்று அது ஏறி - பாய்தலையுடைய இடபமொன்றின் மேல் இவர்ந்து, பலி தேர்ந்து உண்ணும் - பலியேற்று உண்கின்ற, பரமேட்டி - பரமேட்டியும், பேய்கள் வாழும் - பேய்கள் உறைகின்ற, மயானத்து - திருமயானத்திலெழுந்தருளிய, பெரிய பெருமான் அடிகள் ஏ - பெரிய பெருமானென்னும் இறைவரே யாவர் என்றவாறு.

4. **நறைசேர் மலரைங் கணையானை நயனத் தீயால் பொடிசெய்த**
**இறையார் ஆவர் எல்லார்க்கும் இல்லை என்னா தருள் செய்வார்**
**பறையார் முழவம் பாட்டோடு பயிலும் தொண்டர் பயில்கடவூர்ப்**
**பிறையார் சடையார் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே.**

(ப-ரை) நறை சேர் - தேன் துளிக்கின்ற, மலர் ஐங்கணையானை - ஐந்து விதமான மலர்களாகிய அம்புகளையுடைய மன்மதனை, நயனத்தீயால் - கண்ணினின் றெழுந்த நெருப்பினால், பொடி செய்த - சாம்பராக்கிய, இறையாராவர் - இறைவர் ஆவாரும், எல்லார்க்கும் - யாவருக்கும், இல்லை என்னாது - இல்லை யென்னாமல், அருள் செய்வார் - திருவருள் புரிபவரும், பறை ஆர் முழவம் - பறையையும் பொருந்திய முழவத்தையும், பாட்டோடு பயிலும் - பாடல்களோடு பழகுகின்ற, தொண்டர் பயில் - அடியார் வாழ்கின்ற, கடவூர் - திருக்கடவூரி லெழுந்தருளிய, பிறையார் சடையார் - பிறையினை யணிந்த சடையை யுடையவரும், மயானத்து - திருமயானத்திலெழுந்தருளிய. பெரிய பெருமான் அடிகள் ஏ - பெரிய பெருமான் என்னும் இறைவரே யாவர் என்றவாறு.

5. **கொத்தார் கொன்றை மதிசூடிக் கோள்நா கங்கள் பூணாக**
**மத்த யானை உரிபோர்த்து மருப்பும் ஆமைத் தாலியார்**
**பத்தி செய்து பாரிடங்கள் பாடி ஆடப் பலிகொள்ளும்**
**பித்தர் கடவூர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே.**

(ப-ரை) கொத்து ஆர் - கொத்தா யிருக்கின்ற, கொன்றை - கொன்றை மலர் மாலையையும், மதி - பிறையையும், சூடி - அணிந்து, கோள் நாகங்கள் - கொலைத் தன்மை வாய்ந்த பாம்புகள், பூணாக - அணிகலனாகக் கொண்டு, மத்தயானை உரி போர்த்து - மதம் பொருந்திய யானையின் தோலைப் போர்த்து, மருப்பும் - பன்றியின் கோட்டினையும், ஆமை - ஆமையோட்டினையும், தாலியார் - தாலியாகத் தரித்தவரும், பாரிடங்கள் - பூதகணங்கள், பக்திசெய்து - அன்பு கொண்டு, பாடி ஆட - பாடலும் ஆடலும் செய்யாநிற்க, பலி கொள்ளும் - பலியினை ஏற்கின்ற, பித்தர் - பித்தரும், கடவூர் மயானத்து - திருக்கடவூர்த் திருமயானத்தில் எழுந்தருளியிருக்கும், பெரிய பெருமான் அடிகள் ஏ - பெரிய பெருமானென்னும் இறைவரே யாவர் என்றவாறு.

6. **துணிவார் கீளும் கோவணமும் துதைந்து சுடலைப் பொடியணிந்து**
**பணிமேல் இட்ட பாசுபதர் பஞ்ச வடிமார் பினர்கடவூர்த்**
**திணிவார் குழையார் புரமூன்றும் தீவாய்ப் படுத்த சேவகனார்**
**பிணிவார் சடையார் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே.**

(ப-ரை) துணிவார் - துணிந்த நீண்ட, கீளும் கோவணமும் - கீளினையும் கோவணத்தினையும், துதைந்து - உடுத்தி, சுடலைப் பொடி அணிந்து - சுடலைப் பொடியைப் பூசி, பணிமேல் இட்ட - பாம்புகளை உடம்பிற் றரித்த, பாசுபதர் - பாசுபதரும், பஞ்சவடி - பஞ்சவடியைத் தரித்த, மார்பினர் - திருமார்பினையுடையவரும், கடவூர் - திருக்கடவூரி லெழுந்தருளியுள்ள, திணிவார் குழையார் - திட்பத்தையும் நீட்சியையும் உடைய குழையை யணிந்தவரும், புர மூன்றும் - திரிபுரங்களையும், தீவாய்ப் படுத்த - எரித்த, சேவகனார் - வீரரும், பிணிவார் சடையார் - கட்டிய நீண்ட சடையையுடையவரும், மயானத்து - திருமயானத்தி லெழுந்தருளிய, பெரிய பெருமான் அடிகள் ஏ - பெரிய பெருமான் என்னும் இறைவரே யாவர் என்றவாறு.

7. **காரார் கடலின் நஞ்சுண்ட கண்டர் கடவூர் உறைவாணர்**
**தேரார் அரக்கன் போய்வீழ்ந்து சிதைய விரலால் ஊன்றினார்**
**ஊர்தான் ஆவ துலகேழும் உடையார்க் கொற்றி யூராரூர்**
**பேரா யிரவர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே.**

(ப-ரை) கார் ஆர் - கருநிறம் பொருந்திய, கடலின் நஞ்சு உண்ட - கடலிற் றோன்றிய நஞ்சினை யுண்டருளிய, கண்டர் - திருநீல கண்டரும், கடவூர் உறைவாணர் - கடவூரில் வாழ்கின்றவரும், தேர்ஆர் அரக்கன் - தேரினையுடைய அரக்கனாகிய இராவணன், போய் வீழ்ந்து சிதைய - மலையின் கீழகப்பட்டுப் போய் நசுக்குண்ண, விரலால் ஊன்றினார் - திருவிரலால் ஊன்றினவரும், உலகேழும் உடையார்க்கு - ஏழுலகையும் தம்மதாக உடைய இவருக்கு, ஊர்தானாவது - உறைவிடமாவது, ஒற்றியூர் ஆரூர் - திருவொற்றியூரும் திருவாரூருமாம், பேர் ஆயிரவர் - ஆயிரம் பேர்களை உடையவரும், மயானத்து - திருமயானத்தி லெழுந்தருளிய, பெரிய பெருமான் அடிகள் ஏ - பெரிய பெருமான் என்னும் இறைவரே யாவர் என்றவாறு.

8. **வாடா முலையாள் தன்னொடு மகிழ்ந்து கானில் வேடுவனாய்க்**
**கோடார் கேழற் பின்சென்று குறுகி விசயன் தவமழித்து**
**நாடா வண்ணம் செருச்செய்து ஆவ நாழி நிலையருள்செய்**
**பீடார் சடையார் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே.**

(ப-ரை) வாடா - வாட்டமில்லாத, முலையாள் தன்னோடு - திருத்தனங்களையுடைய உமையம்மையாரோடு, மகிழ்ந்து - மகிழ்ச்சியுற்று, கானில் - காட்டகத்து, வேடுவனாய் - வேட்டுவக் கோலத்தோடு, கோடு ஆர் - வளைந்த பற்களையுடைய, கேழல் பின் சென்று - பன்றியின் பின்னே சென்று, குறுகி - நெருங்கி, விசயன் - அருச்சுனனது, தவம் அழித்து - தவத்தினைக் கெடுத்து, நாடா வண்ணம் - தம்மை யறியாதபடி,

செருச் செய்து - போர் புரிந்து, ஆவம் நாழி நிலை - அம்புப் புட்டிலினது நிலைத்தலை, அருள்செய் - அநுக்கிரகித்த, பீடு ஆர் சடையார் - பெருமை வாய்ந்த சடையினையுடையவர், மயானத்து - திருமயானத்தி லெழுந்தருளிய, பெரிய பெருமான் அடிகள் ஏ - பெரிய பெருமான் என்னும் இறைவரே யாவர் என்றவாறு.

9. **வேழம் உரிப்பர் மழுவாளர் வேள்வி அழிப்பர் சிரமறுப்பர்**
**ஆழி அளிப்பர் அரிதனக்கு ஆனஞ் சுகப்பர் அறமுரைப்பர்**
**ஏழை தலைவர் கடவூரில் இறைவர் சிறுமான் மறிக்கையர்**
**பேழைச் சடையர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே.**

(ப-ரை) வேழம் உரிப்பர் - யானையை உரித்தவரும், மழுவாளர் - மழுப்படையை யுடையவரும், வேள்வி யழிப்பர் - தக்க யாகத்தை அழித்தவரும், சிரம் அறுப்பர் - தக்கனைத் தலையரிந்தவரும், அரிதனக்கு - விட்டுணு மூர்த்திக்கு, ஆழி அளிப்பர் - சக்கரப் படையினை யுதவினவரும், ஆன் அஞ்சு உகப்பர் - பசுவினிடத்துப் பஞ்ச கௌவியங்களை உகப்பவரும், அறம் உரைப்பர் - தர்மங்களை உபதேசிப்பவரும், ஏழை தலைவர் - உமையம்மையாருக்குத் தலைவரும், கடவூரில் இறைவர் - திருக்கடவூரிலெழுந்தருளிய இறைமைக் குணமுடையவரும், சிறுமான் மறிக்கையர் - சிறிய மான் கன்றினை யேந்திய கையினை யுடையாரும், பேழை சடையர் - பெரிய சடையினை யுடையவரும், மயானத்து - திருமயானத்தி லெழுந்தருளிய, பெரிய பெருமான் அடிகள் ஏ - பெரிய பெருமான் என்னும் இறைவரே யாவர் என்றவாறு.

10. **மாட மல்கு கடவூரின் மறையோர் ஏத்தும் மயானத்துப்**
**பீடை தீர அடியாருக் கருளும் பெருமான் அடிகள்சீர்**
**நாடி நாவல் ஆரூரன் நம்பி சொன்ன நற்றமிழ்கள்**
**பாடும் அடியார் கேட்பார்மேல் பாவம் ஆன பறையுமே.**

(ப-ரை) மாடம் மல்கு - மாடங்கள் செறிந்த, கடவூரில் - திருக்கடவூரில், மறையோர் ஏத்தும் - மறையவர் துதிக்கின்ற, மயானத்து - திருமயானத்தில் எழுந்தருளி, அடியாருக்கு - தம் தொண்டர்களுக்கு, பீடை தீர - துன்பம் தொலையும்படி, அருளும் - அருள்புரியும், பெருமான் அடிகள் - பெரிய பெருமானாகிய இறைவரது, சீர் - சிறப்பினை யெல்லாம், நாவல் - திருநாவலூரிலே தோன்றிய, ஆரூரன் நம்பி - நம்பியாரூரன், சொன்ன நற்றமிழ்கள் - சொல்லிய நல்ல தமிழ்த் திருப்பாட்டுக்களை, பாடும் அடியார் கேட்பார் மேல் - பாடும் அடியார் மேலும் கேட்பார் மேலும், பாவம் ஆன - பாவமாயின வெல்லாம், பறையும் - கெட்டொழியும் என்றவாறு.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்

# என்வாழ்வில்கண்ட திருமுறையின் மகத்துவம்

## உண்மைச் சம்பவம்

- திருமுறைநெறிச்செல்வர் திருமதி. புஷ்பராணி சதானந்தன்.


திருவாவடுதுறை ஆதீன சைவத்திருமுறை நேர்முகப் பயிற்சிமையம் - கொழும்பில் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் திருமுறை பயின்று வருகிறேன். எமக்கு ஆசான்களாக சைவப்புலவர் சு. செல்லத்துரை ஐயாவும், சைவப்புலவர் சித்தாந்தச்செம்மணி செ. நவநீதகுமாரும், திருமுறைநெறிச்செல்வர் ந. சிவபாலகணேசன் ஐயா, இசைஆசிரியை சங்கீதபூஷணம் ஹம்சாநந்தி தர்மபாலனும் பயிற்றுவிக்கின்றார்கள். திருமுறையில் சமய குரவர்கள் செய்த அற்புதங்களைப் படிக்கும்பொழுது நாம் அறியாக் காலத்தில் நடந்தவற்றைப் படிக்கின்றோமே, இக்காலத்தில் அப்படியொரு அற்புதமும் நடக்கவில்லையே என்று எண்ணுவேன். எம்பெருமான் எனது ஐயத்தைப் போக்க திருவுளம் கொண்டார் போலும்! ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி நெறி நிறைவடைந்த பின்னர் இந்திய திருத்தலயாத்திரை செய்து, திருவாவடுதுறை ஆதீனத்தில் குருமகாசன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகரிடம் பயிற்சிக்கான சான்றிதழைப் பெறுவோம். இம்முறை 2017 ஆம் ஆண்டு தைமாதம் 23ஆம் திகதி காசி யாத்திரைக்கு ஆசான்கள் உட்பட பயிலுனர்களுமாக 35 பேர் சென்றோம். 23.01.2017 அன்று கட்டுநாயக்காவிலிருந்து விமானமூலம் சென்னை சென்று பின் அங்கிருந்து விமானமூலம் டெல்கி சென்றோம். அங்கு மகாத்மாகாந்தி நினைவிடம், இந்திராகாந்தி நூதனசாலை போன்ற இடங்களைப் பார்வையிட்டு இரவு அலகபாத்துக்கு புகைவண்டியில் பயணமானோம். அங்கு இரண்டு கிலோமீற்றர் தூரம் நடந்து சென்று திரிவேணி சங்கமம் எனப்படும் கங்கைக் கரையையடைந்தோம். கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய புனிதநதிகள் கலக்குமிடமான திரிவேணி சங்கமத்தில் நீராடினோம். பின் அயோத்திக்குப் பயணமானோம். அயோத்தியில் தசரதர், இராமர் இருந்த இடங்களைப் பார்த்துக்கொண்டு இராமருடைய அவதார பூமிக்குச் சென்றோம். பாதுகாப்புப் படையினர் எந்தப் பொருளையும் கொண்டுபோகாமல் பாபர் மசூதியினைப் பார்க்க அனுமதித்தார்கள். இராமர் மாளிகையை இடித்து மொகலாயர் அங்கு பாபர் மசூதி என்னும் இஸ்லாமிய மத வழிபாட்டிடத்தைக் கட்டி இருந்தார்கள். அயோத்தியில் புனிதநதியான சரயு நதியில் நீராடி இரவு பஸ்வண்டி மூலம் காசி சென்று அங்கு பாலாஜி என்னும் விடுதியில் தங்கினோம். காலையில் சிறிய வீதிகளூடாக நடந்து கங்கைக்கரையை அடைந்தோம். கங்கைக்கரையில் 64 நீராடும் துறைகள் உள்ளன. கங்கையில் நீராடி இறந்த முன்னோர்களுக்குப் பிண்டம் போட்டோம். மாலை காசி விஸ்வநாதரைத் தரிசிக்கப்புறப்பட்டோம். நீண்டதூரம் நாம் இருந்த விடுதியில் இருந்து நடந்து அனுமான் துறையில் இருந்து படகு மூலம் காசி விஸ்வநாதர் கோயிலுக்கு மணிகர்ணிகா என்னும் துறையில் இறங்கி லலிதாகேட் என்னும் இரண்டாம் இலக்கப்பாதையூடாக சந்து பொந்துகள் எல்லாம் கடந்து ஒற்றையடிப் பாதையூடாக விஸ்வநாதரை தரிசிக்கச் சென்றோம். செல்லும் வழியில் அபிஷேகத்துக்கான பொருட்களையும் வாங்கிக்கொண்டு

சென்றோம். ஒவ்வொருவராக காசிவிஸ்வநாதரைத் தரிசித்து அபிடேகம் செய்தனர். நானே கடைசியாக அபிடேகம் செய்தேன். பின் பார்த்த பொழுது என்னுடன் வந்தவர்கள் ஒருவரையும் காணமுடியவில்லை. வெளியில் சென்றிருப்பார்கள் என்ற எண்ணத்துடன் கால்போன போக்கில் நடந்து வெளியில் நான்காவது வாசலுக்கு வந்துவிட்டேன். அதன்பின்தான் அற்புதம் நடந்தது. நான் வந்த இடத்தில் அவர்களைக் காணவில்லை. சிறிது நேரம் அமர்ந்து பார்த்தேன். ஒருவரும் தென்படவில்லை. நான் அமர்ந்திருந்த இடத்தில் காவல் துறையினரின் நிலையம் இருந்தது. அங்கு போய் முறைப்பாடு செய்ய கடமையில் இருந்தவர்க்கு தமிழோ, ஆங்கிலமோ தெரியாது. ஹிந்தி பேசுவார். அவர் ஓர் வயது போன அம்மையாரைக் கூட்டி வந்து அவரிடம் என்பெயர், வந்தநாள், தங்கி நின்ற இடம் போன்ற விபரங்களை அம்மையார் என்னிடம் தமிழில் கேட்க அவர் ஹிந்தியில் அறிவித்தார். அவரும் கடமை முடிந்து போய் விட்டார். பின் கடமைக்கு வந்தவர்க்கு தமிழ் கொஞ்சம் தெரியும். அவர் சொன்னார் இனிப் படகு காலையில் 3மணிக்கே புறப்படும், நீங்கள் நடந்து 64 துறைகளையும் கடந்து செல்லுங்கள் என்று சொன்னார். நான் காசி விஸ்வநாதரைத் தரிசிக்க சென்ற பொழுது என்னுடன் வந்தவர்களிடம் M.R. ராதா என்ற நடிகர் தனது வாழ்நாளில் இவ்வளவு தூரம் நடக்கவில்லை என்று ஓர் சினிமாவில் சொன்னதை நானும் சொல்லுகிறேன் என்று சொல்லி நடந்தேன். எம்பெருமான் என்னிடம் வருவதற்கா இவ்வளவு தூரம் நடக்கவில்லை என்று சொன்னாய்? இப்பொழுது நட என்றது போல் இருந்தது. நடந்து 64 துறைகளையும் கடந்து எமது இறங்கு துறையில் வந்தவுடன் பாதை இரண்டாகப் பிரிந்தது. எப்படிப் போவது என்று தெரியாமல் திரும்பி விஸ்வநாதரிடம் போவோம் என்று திரும்பும் பொழுது முச்சக்கர வண்டியில் இருந்த இரு சிறுவர்கள் என்னைக் கவனித்து அம்மா எங்கே என்று கைப்பாஷையில் கேட்டார்கள். அச் சிறுவர்களும் ஹிந்தி பேசுபவர்கள். நான் தங்கி இருந்த விடுதியின் பெயரைச் சொன்னதும் கையால் பயப்பட வேண்டாம் என்று சைகை காட்டி வழிகாட்டி ஒருவரை அழைத்து வந்து என்னை தங்கியிருந்த இடத்துக்கு அழைத்துச்சென்றார்கள். அங்கு என்னைக் காணாது பரிதவித்த ஆசான்கள் பயிலுனர்கள் எல்லோரும் நான் அங்கு வரும்வரை திருமுறை ஓதுவதென்ற மன வைராக்கியத்துடன் மிக்க உருக்கத்துடனும் பக்தியுடனும் ஓதிக்கொண்டிருந்தார்கள். என்னைக் கண்டவுடன் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்கள். இந்நிகழ்வு மூலம் எமது ஆசான்களும் பயிலுனர்களும் பக்தியுடனும், நம்பிக்கையுடனும் திருமுறை ஓதியதன் பலன்தான் நான் மீண்டுவந்ததாக எல்லோரும் நம்பினார்கள். திருமுறை ஓதி இக்காலத்திலும் துயர் களையலாம் என்ற உண்மையை எனக்கு எம்பெருமான் தெளிவுபடுத்தினார். யாம் திருமுறையை நம்பவேண்டும். தரிசனத்துக்குச் செல்லும் பொழுது வீண் வார்த்தை பேசக்கூடாது என்பதையும் இச் சம்பவம் உணர்த்தியது. திருமுறையை நம்புங்கள் நலன் பெறுவீர்.

உ
சிவமயம்

# “திருநெறிய தமிழிசை வாணர்”

## தாவடியூர் தேவார இசைமணி எஸ். ஆர். திருஞானசம்பந்தன்



இவர் தாவடியூர் பண்ணிசை வள்ளல் இராசையா தங்கரத்தினம் தம்பதியரின் மகனாக 1946.07.05 இல் தாவடியில் பிறந்தார். தனது ஆரம்பக்கல்வியை தாவடி தமிழ்க்கலவன் பாடசாலையிலும், இடைநிலை உயர்தரக்கல்வியை கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் பெற்றுக்கொண்டார்.

சிறுவயது முதல் தன் தந்தையாரையே பிரதம குருவாகக் கொண்டு பண்ணிசை பயின்றார். அத்துடன் பண்ணிசைவல்லார் குப்பிளான் செல்லத்துரை, கொக்குவில் சைவப்புலவர்மணி குமாரசாமிப் பிள்ளையிடமும் பயின்றுள்ளார். தமிழகம் திருப்பனந்தாள் ஆதீனத்தில் தேவார இசைபயின்று 1984இல் **“தேவார இசைமணி”** பட்டத்தைப் பெற்றுள்ளார்.

பல விழாக்களில் தேவாரப் பண்ணிசைக் கச்சேரிகளை நடத்திப் பல பட்டங்களையும் கௌரவத்தையும் பெற்றுள்ளார். திருவாவடுதுறை ஆதீனத்தில் மட்டும் ஐந்து முறை பண்ணிசைக்கச்சேரி செய்து கௌரவிக்கப்பட்டுள்ளார்.

1972இல் தமிழகம் கோவை தமிழிசை மன்றத்தில் **“பண்ணிசைச்செல்வன்”** பட்டத்தையும், 1976இல் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் **“பண்ணிசை வேந்தர்”** பட்டத்தையும், 1984இல் கிருபானந்தவாரியார் சுவாமிகளிடம் **“திருமுறை வித்தகர்”** பட்டத்தையும், 1999இல் தாவடி ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமத்தில் **“அருளிசை அரசு”** பட்டத்தையும், 2001இல் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் **“கலைஞானகேசரி”** பட்டத்தையும், 2002இல் **“கலாபூஷணம்”** பட்டத்தையும், 2005இல் நல்லூர் பிரதேச செயலகத்தால் **“கலைஞானச்சுடர்”** பட்டத்தையும் பெற்றுள்ளார்.

இவர்பாடியுள்ள திருமுறைத் தேனமுது ஒலிப்பேழைகள் பல வெளிவந்துள்ளன. தமிழகத்தின் பெருமைக்குரிய வித்துவான்கள் பலர் பின்னணி இசை வழங்கியுள்ளார்கள்.

தமிழகத்தில் இருந்த காலத்தில் பிரபலம் வாய்ந்த பண்ணிசை வித்துவான்களான திருவாவடுதுறை டி. சோமசுந்தரதேசிகர், திருப்பனந்தாள் முத்துக்கந்தசாமி தேசிகர், வயலூர் திருஞானசம்பந்தன், திருச்சி வே. பாலசுப்பிரமணியம் முதலான பலருடன் சேர்ந்து பாடியுள்ளார். மலேசியாவில் ஏழுமுறை பண்ணிசைக் கச்சேரிகள் நிகழ்த்தியுள்ளார்.

திருமுறை மன்றத்தின் ஆரம்பகாலம் முதல் இன்றுவரை தேவாரப்பண்ணிசை ஆசிரியராகப் பணிபுரியும் இவரது சேவையைப் பாராட்டி ஏவிளம்பி ஆடிப்பூரணை திருமுறைப் பெருவிழாவில் **“திருநெறிய தமிழிசை வாணர்”** எனும் பட்டமும், பொற்கிழியும் வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றார்.

உ
சிவமயம்

# "திருநெறிய தமிழிசை வாணி"

## கொழும்பு சங்கீதபூஷணம் திருமதி. ஹம்ஸாநந்தி தர்மபாலன்



இவர் சேதுபதி கதிராசிப்பிள்ளை தம்பதியினருக்கு மகளாக 1960.10.14ஆம் திகதி வண்ணார்பண்ணையில் பிறந்தார். ஆரம்பக்கல்வியை மட்டக்களப்பு, கல்லடி உப்போடை, இராமகிருஷ்ண மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்திலும் விஞ்ஞான உயர் கல்வியை தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியிலும் பெற்றுக்கொண்டார். இவர் சிறுவயதிலிருந்தே தாய்வழிப் பேரனாகிய காசியர் ஆறுமுகம் அவர்களின் புராணபடனங்கள் கேட்டதனால் இசையில் ஆர்வம் கொண்டார்.

இவர் இசையை மட்டக்களப்பு சங்கீதபூஷணம் என். ராஜு அவர்களிடமும், தொடர்ந்து கீரிமலை சங்கீதபூஷணம் நாகம்மா கதிர்காமர் அவர்களிடமும் ஆசிரியர் தரம்வரை கற்றார். சமகாலத்தில் விழிசிட்டி ஞானவைரவர் ஆலயத்தில் நடைபெற்ற பண்ணிசை வகுப்பில் ஓதுவார் ஆ. கனகசபை அவர்களிடம் (மாமா) பண்ணிசைப் பயிற்சியை பெற்றார்.

திரு. மகாலிங்கசிவம் அவர்களின் அனுசரணையில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வீணை பயின்று முதலாம் வகுப்பில் தேறி (1985)திரு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களால் **"சங்கீதபூஷணம்"** பட்டமும், தங்கப்பதக்கமும் வழங்கி கௌரவிக்கப்பட்டார். தொடர்ந்து 1987இல் வாய்ப்பாட்டில் முதல்வகுப்பில் தேறி **"சங்கீதபூஷணம்"** பட்டம் பெற்றார். தொடர்ந்து பட்டப்படிப்பை மேற்கொண்டு 1990இல் **"இளங்கலைஇசைமாணி"** பட்டமும் (B.Music.) பெற்றார். தேவார இசைமணி ஞானப்பிரகாசம் ஓதுவார் அவர்களிடமும் பண்ணிசைப் பயிற்சியைப் பெற்றார். மதுரை தமிழிசை சங்கத்திலும், சென்னை இராஜாசார் அண்ணாமலை மன்றத்திலும், திருவையாறு தியாகராஜர் உற்சவத்திலும் இசைக் கச்சேரிகள் நடத்தியுள்ளார்.

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பிரிவு இசைத்துறையில் நிரந்தர விரிவுரையாளராக 1990 - 1997 வரை கடமைபுரிந்தார். நல்லூர் மகோற்சவகால இசையரங்கம், அண்ணாமலை மன்றம், இளங்கலைஞர் மன்றம், இணுவில் இளந்தொண்டர்சபை ஆகிய இடங்களில் கச்சேரிகள் நடத்தியுள்ளார்.


தற்போது கொழும்பில் புனித அந்தோனியார் பெண்கள் மகாவித்தியாலயத்தில் இசையாசிரியராக கடமையாற்றுவதோடு, இராமகிருஷ்ணமிஷன் ஞாயிறு சமயபாடசாலை யிலும், இரத்மலானை இராமகிருஷ்ணா அறநெறிபாடசாலையிலும், திருவாவடுதுறை ஆதீன திருமுறை நேர்முகப் பயிற்சி மையத்திலும் ஆசிரியராக பணியாற்றுகிறார். அத்துடன் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திலும் வருகைதரு விரிவுரையாளராகவும், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்துக்கு வளவாளராகவும், பணியாற்றுகிறார். இவரது மாணவர்கள் பலர் பல உயர் பதவிகளில் பணியாற்றுகிறார்கள்.

அகில இலங்கைத் திருமுறை மன்றமும், திருவாவடுதுறை ஆதீனக் கொழும்பு, இணுவில் திருமுறை, சைவசித்தாந்தப் பயிற்சி மையங்களும் இணைந்து இணுவிலில் நடத்தும் ஏவிளம்பி ஆடிப்பூரணைத் திருமுறைப் பெருவிழாவில் **"திருநெறிய தமிழிசைவாணி"** எனும் பட்டமும், பொற்கிழியும் வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றார்.

உ
சிவமயம்

# "திருநெறிய தமிழிசை வாணர்"

## அளவெட்டி சங்கீதபூஷணம் விஸ்வநாதன் சிவஞானசேகரம்



இவர் விஸ்வநாதன் இலட்சுமியம்மா தம்பதியரின் மகனாக 1949.07.13 ஆம் திகதி அளவெட்டியில் பிறந்தார். ஆரம்பக்கல்வியை அளவெட்டி சதானந்த வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை அளவெட்டி அருணோதயாக் கல்லூரியிலும் பெற்றுக்கொண்டார்.

திருப்பனந்தாள் ஆதீனத்தில் பண்ணிசை பயின்று 1976இல் "**திருமுறைப் பண்ணிசைமணி**" எனும் பட்டத்தைப் பெற்றார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சங்கீதம் பயின்று 1977இல் முதலாம் பிரிவில் சித்தியடைந்து "**சங்கீதபூஷணம்**" பட்டத்தினை பெற்றார்.

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியில் இசையாசிரியராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளார்.

ரசிகரஞ்சனசபா, ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரி, இளங்கலைஞர் மன்றம் முதலான மன்றங்களில் ஆசிரியராகப் பணிபுரிந்துள்ளார்.

இணுவில் இளந்தொண்டர் சபையில் 1986 தொடக்கம் இன்றுவரை இசையாசிரியராகப் பணிபுரிகின்றார். யாழ். பல்கலைக்கழக இடைவரவு விரிவுரையாளராகவும், திருவாவடுதுறை ஆதீனத் திருமுறைப் பயிற்சி மைய இணுவில் கிளையில் பண்ணிசை ஆசிரியராகவுள்ளார். வட இலங்கைச் சங்கீத சபையின் பொருளாளராகவுள்ள இவர் 15 வருடங்களாக செயற்குழு உறுப்பினராகவும் உள்ளார்.

இவரது மாணவர் பலர் உயர்ந்த தரமுடைய பண்ணிசை, சங்கீத வித்துவான்களாக விளங்குகின்றனர். இவரது சேவையைப் பாராட்டி அகில இலங்கை இந்து மாமன்றம் "**திருமுறைப் பண்ணிசைமணி**" எனும் பட்டத்தையும், இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர்சபை "**பண்ணிசைச் செம்மல்**" எனும் பட்டத்தினையும், நல்லூர்ப் பிரதேச கலாமன்றம் "**கலைஞானச்சுடர்**" எனும் பட்டத்தினையும், தெல்லிப்பழைப் பிரதேச கலாமன்றம் "**கலைச்சுடர்**" எனும் பட்டத்தையும், இந்துசமய கலாசார திணைக்களத்தினர் "**கலாபூஷணம்**" விருதையும் வழங்கிக் கௌரவித்துள்ளனர்.

அகில இலங்கைத் திருமுறை மன்றமும், திருவாவடுதுறை ஆதீனக் கொழும்பு, இணுவில் திருமுறை, சைவசித்தாந்தப் பயிற்சி மையங்களும் இணைந்து இணுவிலில் நடத்தும் ஏவிளம்பி ஆடிப்பூரணைத் திருமுறைப் பெருவிழாவில் "**திருநெறிய தமிழிசைவாணர்**" எனும் பட்டமும், பொற்கிழியும் வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றார்.

உ
சிவமயம்

# "திருநெறிய தமிழிசை வாணர்"

## வட்டுக்கோட்டை ஓதுவார் சிதம்பரப்பிள்ளை தில்லைமணி



இவர் சிதம்பரப்பிள்ளை பேபி தம்பதியினருக்கு மகனாக 1952.10.23ஆம் திகதி வட்டுக்கோட்டையில் பிறந்தார். ஆரம்பக்கல்வியை மாவிட்டபுரம் அமெரிக்க மிசன் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை வட்டு. திருஞானசம்பந்தர் வித்தியாலயத்திலும், உயர் கல்வியை வட்டு. இந்துக்கல்லூரியிலும் பெற்றுக்கொண்டார்.

ஏழுவயதில் ஸ்ரீலஸ்ரீ மணிபாகவதரிடம் இசைக்கல்வியைப் பயிலத் தொடங்கினார். தொடர்ந்து சங்கீத பூஷணங்கள் கோவிந்தராசன், சந்திரபாலன், முத்துக்குமாரசாமி சர்மா, க. கணபதிப்பிள்ளை முதலானவர்களிடம் பயின்றார்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பரமாசாரியாரின் சீடராக அவருடைய கதாப்பிரசங்கங்களுக்கு உடன் பாடிவந்தார். ஆதீனத்தின் அனுசரணையுடன் தர்மபுரம் தேவாரபாடசாலையில் பண்ணிசை பயின்று (1975-1979) **"பண்ணிசைமாணி"** பட்டம் பெற்றார்.

திருக்கேதீஸ்வரத்தில் ஓதுவாராகவும், அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம், இளங்கலைஞர் மன்றத்திலும் இசை ஆசிரியராகவும் பணி புரிந்துள்ளார். அகில இலங்கைத் திருமுறை மன்றத்தில் 14 வருடங்களாக பண்ணிசை ஆசிரியராகப் பணி புரிந்துள்ளார். இலங்கையின் பல பாகங்களிலும் பண்ணிசைக் கச்சேரிகள் நடத்திப் பாராட்டும், பட்டங்களும் பெற்றுள்ளார்.

இவரது பண்ணிசைப் பணியினைப் பாராட்டி சித்தங்கேணி சிதம்பரேஸ்வர தேவஸ்தானத்தினர் 2001 இல் "**பண்ணிசைச் செல்வன்**" எனும் பட்டத்தையும் வழங்கியுள்ளனர்.

இந்துமத குருபீடாதிபதி ஸ்கந்த சாம்பசிவ சிவாசாரியார் நினைவு விழாவில் "**பண்ணிசைக் கலாபமணி**" எனும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

அகில இலங்கைத் திருமுறை மன்றமும், திருவாவடுதுறை ஆதீனக் கொழும்பு, இணுவில் திருமுறை, சைவசித்தாந்தப் பயிற்சி மையங்களும் இணைந்து இணுவிலில் நடத்தும் ஏவிளம்பி ஆடிப்பூரணைத் திருமுறைப் பெருவிழாவில் "திருநெறிய தமிழிசைவாணர்" எனும் பட்டமும் பொற்கிழியும் வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றார்.

உ

திருச்சிற்றம்பலம்

அகில இலங்கைத் திருமுறைமன்றம்
திருவாவடுதுறை ஆதீன கொழும்பு - இணுவில்
திருமுறை, சைவசித்தாந்தப் பயிற்சி மையங்களின்
அனுசரணையுடன் நடத்தும்

# திருமுறைப் பெருவிழா

காலம் : ஏவிளம்பி ஆடிப்பூரணை.
: 2017.08.07 திங்கட்கிழமை காலை 6.00 மணி தொடக்கம்.
இடம் : இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர்சபை மண்டபம்.
தலைவர் : சிவநெறித்தேசிகர் பண்டிதர் வ. பேரின்பநாயகம் அவர்கள்.
முன்னிலை : நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீன குருமகா சந்நிதானம் அவர்கள்.

காலை6.00 மணி - அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல் ஆரம்பம்.
7.00 மணி - சமயகுரவர்களும், திருமுறை ஏட்டுச்சுவடியும் ஊர்வலம்.
9.00 மணி - ஆசியுரை - நல்லை ஆதீன சுவாமிகள்.
வரவேற்புரை - ஞானஏந்தல் ந. பரமேஸ்வரன் அவர்கள்.
9.30 மணி - திருநெறிய தமிழிசை.
♦ தேவாரஇசைமணி இரா. திருஞானசம்பந்தன் தலைமையில் திருமுறை மன்ற மாணவர்கள்.
10.00 மணி- ♦ சங்கீதபூஷணம் ஹம்ஸாநந்தி தர்மபாலன் தலைமையில் கொழும்புத் திருமுறைப் பயிற்சிமையப் பயிலுநர்கள்.
10.30 மணி- ♦ சங்கீதபூஷணம் வி. சிவஞானசேகரம் தலைமையில் இணுவில் திருமுறைப் பயிற்சிமையப் பயிலுநர்கள்.
11.00 மணி- சிறப்பு மலர்கள் வெளியீடு.
♦ சைவநீதி திருமுறைச் சிறப்புமலர்.
♦ பண்ணிசைப் பாடத்திட்டப் பாடல்கள்.
11.30 மணி- திருநெறிய தமிழுரைகள்.
♦ சித்தாந்தச் செம்மணி செல்லையா நவநீதகுமார் அவர்கள்.
♦ ஆதீனப்புலவர் ஏ. அனுசாந்தன் அவர்கள்.
12.00 மணி- திருநெறிய தமிழிசைவாணர் பட்டமளிப்பும் கௌரவிப்பும்.
கௌரவம் பெறுவோர்.
♦ தேவார இசைமணி இரா. திருஞானசம்பந்தன்.
♦ சங்கீதபூஷணம் ஹம்ஸாநந்தி தர்மபாலன்.
♦ சங்கீதபூஷணம் வி. சிவஞானசேகரம்.
♦ ஓதுவார் சிதம்பரப்பிள்ளை தில்லைமணி.
கௌரவிப்புரை: சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள்.
மகிழ்வுரை : திரு செ. பாலச்சந்திரன் அவர்கள்.
1.00 மணி - மாகேசுர பூசை.

திருச்சிற்றம்பலம்.

# நினைவிற் கொள்வதற்குரிய வழிபாட்டு நாட்கள்
# ஏவிளம்பி வருடம் புரட்டாதி மாதம்

| தமிழ்த் திகதி | ஆங்கிலத் திகதி | கிழமை | விரதம் |
|---|---|---|---|
| 01 | 17.09.2017 | ஞாயிறு | மாதப்பிறப்பு, பிரதோஷவிரதம் |
| 03 | 19.09.2017 | செவ்வாய் | அமாவாசை விரதம், மாஹாளய பட்சமுடிபு |
| 04 | 20.09.2017 | புதன் | நவராத்திரி விரதாரம்பம் |
| 07 | 23.09.2017 | சனி | சதுர்த்தி விரதம் |
| 10 | 26.09.2017 | செவ்வாய் | ஷஷ்டி விரதம் |
| 11 | 27.09.2017 | புதன் | சரஸ்வதி பூஜாரம்பம் |
| 13 | 29.09.2017 | வெள்ளி | மகாநவமி விரதம் சரஸ்வதி பூஜை |
| 14 | 30.09.2017 | சனி | விஜயதசமி, கேதாரகௌரி விரதாரம்பம் ஏனாதிநாத நாயனார் குருபூசை |
| 17 | 03.10.2017 | செவ்வாய் | பிரதோஷ விரதம், நரசிங்கமுனையரைய நாயனார் குருபூசை |
| 18 | 04.10.2017 | புதன் | நடேசரபிஷேகம் |
| 19 | 05.10.2017 | வியாழன் | பூரணைவிரதம் |
| 21 | 07.10.2017 | சனி | உருத்திரபசுபதி நாயனார் குருபூசை |
| 22 | 08.10.2017 | ஞாயிறு | சங்கடஹரசதுர்த்தி விரதம் |
| 23 | 09.10.2017 | திங்கள் | கார்த்திகை விரதம் |
| 24 | 10.10.2017 | செவ்வாய் | திருநாளைப்போவார் நாயனார் குருபூசை |
| 30 | 16.10.2017 | திங்கள் | அருணந்தி சிவாசாரியார் குருபூசை |
| 31 | 17.10.2017 | செவ்வாய் | பிரதோஷ விரதம் |

## திருவாவடுதுறை ஆதீன சைவத்திருமுறை நேர்முகப் பயிற்சி மையம்–இணுவில்.



## திருவாவடுதுறை ஆதீன சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம்–இணுவில்.



## திருவாவடுதுறை ஆதீன சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம் – கொழும்பு.



## திருவாவடுதுறை ஆதீன சைவத்திருமுறை நேர்முகப் பயிற்சி மையம் – கொழும்பு.



இவ்விதழ் கொழும்பு திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்தப் பயிற்சி மையத்தினரால்
Sharp Graphics (Pvt.) Ltd. இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.